Registered at the G. P. O. as a Newspaper   வாரப் பதிப்பு   விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன் 389   தபாற் பெட்டி எண் 49

மலர் ○   யாழ்ப்பாணம்   குரோதி மார்கழி 6ஆம் நாள்   ஷஃபான் பிறை 15   (20-12-64)   ஞாயிற்றுக்கிழமை   இதழ் 1

இனம் இனம் இனம்

"மில்க்வைற் நீல சோப்"

பாவிப்பாளருக்கு ஒரு அதிர்ஷ்டம்

எங்கள் சோப்பின் உறைகளைச் சேமியுங்கள்

50 உறைகளுக்கு

அழகான—கவர்ச்சியான உறுதியான

"மார்க்கெட்டிங் பாக்"

இனாமாக உங்களுக்கு கிடைக்கும்

எங்கள் காரியாலயத்தில் அல்லது

விற்பனை வானில் உறைகளைக்

கொடுத்து பரிசைப் பெறலாம்.

# பிரதமருக்கு எந்த தொகுதி?

## சுதந்திரக் கட்சியை எதிர்நோக்கும் புதிய நெருக்கடி

கொழும்பு, சனி

அத்தனகலையா? பலாங்கொடையா? இரத்தினபுரியா? எந்தத் தொகுதியில் பிரதமர் சிறிமா போட்டியிடுவார்? இந்தப் பிரச்னை இன்னும் தீர்க்கப் படவில்லை.

அடுத்த வருடம் மார்ச் மாதம் 22-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில், பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எந்தத் தொகுதியில் போட்டியிடுவார் என்பது இன்னும் தீர்க்கப்படாத ஒரு பிரச்னையாக இருந்துவருகிறது. அடுத்த பொதுத் தேர்தலில், பிரதம மந்திரிக்கு எந்தத் தொகுதியை ஒதுக்குவதென்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக ஆராய்ந்துவருகிறது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, அத்தனகலை தொகுதியில் போட்டியிடுவதென்றுதான் முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரதமரின் நெருங்கிய உறவினரான முன்னாள் அத்தனகலை எம். பி. ஜே. பி. ஒபயசேகரா போட்டியிலிருந்து வாபஸ்பெறவோ அல்லது பிரதமருக்காக விட்டுக்கொடுக்கவோ விரும்பாத காரணத்தினால்தான் இந்த "தொகுதி நெருக்கடி" இப்பொழுது ஏற்பட்டுள்ளது. திரு. ஒபயசேகராவுக்கு மீரிகம தொகுதியில் இடம் கொடுத்த போதிலும் அதை அவர் விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது.

அத்தனகலைத் தொகுதியில் இடம் கிடைக்காத பட்சத்தில் பிரதமர் சிறிமா பலாங்கொடையில் போட்டியிடலாம். ஆனால் முன்னாள் மொழிக் கமிஷனர் திரு. எல். எல். ஜே. டி. எஸ். செனிவரத்னாவின் பாரியாரான திருமதி சீதா செனிவரத்னா பலாங்கொடையில் போட்டியிட விருப்பதால் அங்கும் பிரச்னை தோன்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். பண்டாரநாயக்காவின் தொகுதி அத்தனகலையாகும். அந்தத் தொகுதியின் அங்கத்தவராகவிருக்கவே பிரதமர் பெரிதும் விரும்புவதால், "நெருக்கடிகள்" தீர்க்கப்பட்டு பிரதமர் இந்தத் தொகுதியிலேயே போட்டியிடலாமென நம்பப்படுகிறது. இதற்கிடையில் பிரதமர் விரும்பும் பட்சத்தில் இரத்தினபுரியில் போட்டியிட ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என்றும் இதற்காக தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளவதாகவும் முன்னாள் இரத்தினபுரி எம். பி. திரு. தனபால வீரசேகரா தெரிவித்துள்ளார்.

பலாங்கொடைத் தொகுதியின் அங்கத்தவராக பிரதமரின் இளைய சகோதரரான திரு. கிளிபோர்ட் ரத்வத்தை இருப்பதால் பிரதமர் சிறிமா அநேகமாக அத்தனகலையிலேயே போட்டியிடலாம் எனத்தெரிய வருகிறது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது

டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது

டொலர் மார்க்

அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்

14-டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:

அலுமினிய தொழிற்சாலை

மாவிட்டபுரம்.

## நல்லூரில் சுதந்திரக்கட்சி!

யாழ்ப்பாணம், ஞாயிறு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லூர்த் தொகுதியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. நவரத்தினம் தனவீரசிங்கம் போட்டியிடுவாரென நம்பப்படுகிறது.

நல்லூர்த் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் முடிவுசெய்திருப்பதைத் தொடர்ந்தே இவர் இத்தொகுதியில் போட்டியிடவிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமது அபேட்சகர்களை நிறுத்துவது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. திருக்கோணமலை தொகுதியில் அபேட்சகர் ஒருவரை நிறுத்துவது குறித்து முடிவுசெய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மற்றும் சில தொகுதிகளில் சுதந்திரக்கட்சி சார்பாக அபேட்சகர்களை நிறுத்துவது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

## கல்முனை, பொத்துவில் தொகுதி

கொழும்பு, சனி

கலைக்கப்பட்ட பார்லிமெண்டில் அங்கம் வகித்த தமிழரசு கட்சி எம்.பி.க்கள் அனைவரும் மீண்டும் தங்கள்தொகுதிகளில் போட்டியிடுவார்கள் என நம்பப் படுகிறது.

கல்முனைத்தொகுதியில் திரு. மசூர் மௌலானாவும், பொத்துவில் தொகுதியில் திரு. காதரும், மூதூர் தொகுதியில் திரு. முகம்மதலியும்போட்டியிடுவார்கள் என அறியப்படுகிறது. திரு. காதர் கடந்த பலவருட காலமாக தமிழரசுக்கட்சியுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

# இருநாட்டுஅதிகாரிகள் பேச்சுக்கள் முடிவு

## தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் புதுடில்லியில் சந்திப்பர்

கொழும்பு, சனி

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை விரைவாக சுமுகமாக அமுல்நடத்தும் பொருட்டு இலங்கை, இந்திய அரசாங்க அதிகாரிகளுக்கிடையே இங்கு ஆரம்பமான பேச்சுவார்த்தைகள் நேற்று சுமுகமாக முடிவடைந்தன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பல நல்ல முடிவுகள் ஏற்பட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இந்திய அதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் செய்து கொள்ளப்பட்ட தீர்மானங்கள், இரண்டு அரசாங்கங்களின் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது குறித்து மேலும் பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன. இலங்கையின் பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் இருநாட்டு அதிகாரிகளுக்குமிடையே புதுடில்லியில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்.

இன்றைய

# நெருக்கடிப் பிரச்னைகளைதீர்க்க கூட்டுறவு இயக்கம் முன்வரவேண்டும்

## கூட்டுறவு ஆணையாளர் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"தற்பொழுது அரசாங்கத்தின் தலையீடு கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்டு வருகிறது. இதனால் கூட்டுறவு இயக்கங்கள் சுதந்திரமாக இயங்க முடியவில்லை. ஐக்கிய இயக்கத்தில் அரசாங்கம் தலையிட்டால் அந்த இயக்கம் செத்து விடும் என்று காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேரு கூறியிருக்கிறார்" என்று வடபகுதியின் ஐக்கிய மேற்பார்வை சபையின் வருடாந்த கூட்டத்திற்கு திரு. ரீ. கே. ராஜசேகரம் தலைமை வகித்துப்பேசும்போது கூறினார்.

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் நேற்றுக்காலை ஆரம்பமான இக் கூட்டத்தில் கூட்டுறவு ஆக்கத்துறை ஆணையாளர் திரு எச். எஸ. வணசிங்கா

(12-ம் பக்கம் பார்க்க)

# சங்கானை பட்டினசபை தேர்தல் முடிவுகள்

சுழிபுரம், சனி

சங்கானை பட்டினசபைத் தேர்தல் இன்று நடைபெற்றது. மொத்தம் ஏழு வட்டாரங்களில் ஒரு வட்டாரத்தைத் தவிர ஆறு வட்டாரங்களிலும் நேரடிப்போட்டிநடைபெற்றது. போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், 2-ம் வட்டாரம் திரு. கே. பசுபதி, 3-ம் வட்டாரம் திரு. சி. கந்தசாமி, 4-ம் வட்டாரம் திரு என். கணேஸ(போட்டியில்லை), 5-ம் வட்டாரம் திரு. த. இராசையா, 6-ம் வட்டாரம் திரு. கா. செல்வராசா, 7-ம் வட்டாரம் திரு. த. அம்பலவாணர்.

ஆறு வட்டாரங்களிலும் போட்டி வெகு சுறுசுறுப்பாக நடைபெற்றது.

## இந்தியா: 4 வி — 366

ஹைதராபாத் டிச 19

இன்று இங்கு ஆரம்பமாகிய இலங்கை—இந்திய டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதிவரை 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 366 ஓட்டங்கள் எடுத்தது. ஜெசியசிமா 181 ஓட்டங்கள் எடுத்தது குறிப்பிடத்தக்கது. நாளையும் இந்தியா தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடும்.

ராதா குரு தைலம்




240,வியாதிகளுக்கு மகா சஞ்சீவி

தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி வயிற்றுவலி, பல்வலி, விஷக்கடி இருமல், நெஞ்சுச்சளி, வாதம் வலிப்பு, ஜன்னி, வரய்வுப்- பிடிப்புகள் முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்தது.

எஸ். சுப்பிரமணியம் அன் கோ.

160, செட்டியார் தெரு, கொழும்பு.   53, கே. கே. எஸ். ரோட், (போன்:541) யாழ்ப்பாணம்.

உயர்ந்த ரகம்! நிதான விலை!

தொலைபேசி இல: 7186

தந்தி: "சுவாமிஜி"



சகல விதமான பிடவைத் தினுசுகளும் சாய்ப்புச் சாமான்களும் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்**

உரிமையாளர்: ஆ. மயில்வாகனம் Prop: A. Mylvaganam

இல: 22, பெரியகடை, யாழ்ப்பாணம்.



**New Release Records**

**His Master's voice, Columbia**

உலகில் புதிய ரெக்கோட்டுகள் புகழ்பெற்ற ரெக்கோட்டுகள்



வாங்கவோ, விற்கவோ அல்லது திருத்தவோ யாழ்ப்பாணத்தில் முதல்தர ஸ்தாபனம்

**எஸ். சுகுமாரன்கண்டு அன் பிறதர்**

86, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

போன்: 265



**For Good looks.**

Wear Sack blouses with tussels.

They are Styled to Satisfy the Modern Fashion

Size 29" to 34". Price-7.50

**Present them for X' Mas**



Available at

**M. Chandru**

55, Main Street, Jaffna.



போன்: 640

**மலாயா கபே**

36 - 38, பெரியகடை, : யாழ்ப்பாணம்.

பலவித சிற்றுண்டி பலகார வகைகளும் சிறந்த தேநீர், காப்பி, பசும்பால், சுத்த சைவ போசனமும், சர்பத் மற்றும் குளிர்ந்த பானவகைகளும் எந்நேரமும் கிடைக்கும்.

எங்களிடம் பலவித சாய்ப்புச் சாமான்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**MALAYA CAFE**

Prop: M. K. KATHIRAVELU.

*Recipient's of the first prize from the Jaffna Municipal Council for the years 1963 to 1964.*


## இணுவிலில் கலைக் கதம்பம்

கந்தரோடை கலாமன்றத்தினர் தமது முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இணுவில் ஸ்ரீகாலிங்கன் தியேட்டரில் கடந்த புதன்கிழமை இரவு கலைக்கதம்பவிருந்து நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்தனர்.

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் விருந்தில் இடம்பெற்றன. கலாமன்ற நடன வகுப்பு மாணவிகள் பல நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். ராதா-கிருஷ்ண நடனமும், குறத்தி நடனமும் ஓரளவு ரசிக்கக் கூடியதாக இருந்தன.

கலையாக சொர்ணலிங்கம் தமது இந்த தள்ளாத வயதிற்கூட மேடையிலேறி 'வயோதிபர் விடுதியில் விசித்திர சம்பவங்களை'ச் சொல்ல முடியுமா எனப்பலரும் ஐயுறவுகொண்டிருந்தனர். ஆனால் அவர் மேடையில் ஏறியதும் நாம் வயிறு குலுங்கச் சிரிக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டார். பல குரல்களில் பாடிப்பேசி எம்மையெல்லாம் அவர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

சங்கீதபூஷணம் பா. முத்துக்குமாரசாமி சர்மாவின் இன்னிசை, 'லயஞான சிரோமணி' ஏ. எஸ். இராமநாதனின் லயவின்யாசம் என்பன செவிக்கு இன்பமூட்டின. யாழ் கவின்கலை வளர்ச்சி மன்றத்தினர் மேடையேற்றிய 'யாருக்கு அதிருஷ்டம்' என்ற நாடகம் பரவாயில்லை.

கலைக்கதம்ப விருந்தில் பரிமாறப்பட்டவையெல்லாம் பதப்படுத்தப் படவில்லையாயினும் ஒரு சில அம்சங்கள் பாராட்டத்தக்கன. விழாவை நடத்துவதில் கவனமும் மிகுந்த பிரயாசையும் வேண்டும் என்பதை விழா நிர்வாகிகள் உணர்ந்து கொண்டிருப்பர். குறைகள் நிறைந்த இந்த விருந்தினை அளித்தவர்கள் கவனமெடுப்பின் நல்ல நிகழ்ச்சிகளைத் தர முடியும்.

—ராஜன்

## கலைவாணர் வீட்டுக் கல்யாணம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் குமாரத்தி முத்துலட்சுமிக்கும், பி. கிருஷ்ணமூர்த்திக்கும் சமீபத்தில் திருமணம் நடைபெற்றதல்லவா! விழாவுக்கு வந்தவர்களுக்கு தாம்பூலப்பைகள் கொடுக்கப்பட்டன. அந்தப் பையிலுள்ள பாக்குப் பொட்டலத்திலும் கூட "திருமணம்" 'முத்துலட்சுமி—கிருஷ்ணமூர்த்தி' என்று அச்சடப்பட்டிருந்தது. அத்துடன் 'என். எஸ். கே. பாரகுத்தூள்' என்றும் முத்திரைப் போடப்பட்டிருந்தது. திருமண அழைப்பிதழ்களில் எம். ஜி. இராமச்சந்திரனும், என். எஸ். திரவியமும் ஒப்பமிட்டு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

## சுந்தராம்பாள் நடிக்கும் படத்தில் 'ஞானப்பழம்'

ஸ்ரீ விஜயலட்சுமி பிக்சர்ஸார் தயாரிக்கும் "திருவிளையாடல்" என்ற படத்தில் கே. பி. சுந்தராம்பாள் நடிப்பார். இப்படத்தில் அவர் ஔவையாராகத் தோன்றி 'ஞானப் பழத்தைப் பிழிந்து' என்ற அவருடைய வெற்றிப்பாடலைப் பாடி நடிப்பார். இப்பாடலை இதற்காகவே மறுபடியும் பாடவிருக்கிறார். ஞானப்பழத்திற்காக அம்மையப்பரிடம் கோபித்துக்கொண்டு முருகன் வெளியேறும் போது தமிழ் மூதாட்டி ஔவை அங்கு தோன்றி முருகனைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கும் காட்சியில் கே. பி. சுந்தராம்பாள் இப்பாடலைப் பாடி நடிப்பார். சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய இப்பாடலுடன் கண்ணதாசன் எழுதும் இரண்டு பாடல்களையும் அவர் பாடவிருக்கிறார். சிவாஜி கணேசன் சிவனாகவும் சாவித்திரி சக்தியாகவும் இதில் நடிக்கின்றனர்.

# கலை அரங்கம்

## 'மனோகர் தென்னாட்டின் செல்வக் குழந்தை!'

### பிருதிவிராஜ்கபூர் பாராட்டு

"மனோகர் என்னுடைய குழந்தை; அத்துடன் அவர் தென்னாட்டின் செல்வக் குழந்தை" என்று பிரபல வட இந்திய நடிகர் பிருதிவிராஜ் கபூர் மனோகரின் புகழ்பெற்ற 'இலங்கேஸ்வரன்' நாடகவிழாவில் பேசியபோது சொன்னார்.

பம்பாய் சண்முகானந்தசபாவில் 526 முறையாக இலங்கேஸ்வரன் நாடகம் அரங்கேற்றப்பட்டபோதுதான் பிருதிவிராஜ் கபூர் மனோகரின் திறமையைப் பாராட்டிப் பேசினார்.

"அநேகமாக தென்னிந்தியாவின் மிகப்பிரபலமான நாடகக் கலைஞர்களையெல்லாம் சந்தித்திருக்கிறேன். மனோகரைத்தான் சந்திக்காமலிருந்தேன். இன்று அந்தச் செல்வப்பிள்ளையைச் சந்தித்து விட்டேன். அவரை என் பிள்ளை என அழைக்கமுடியும். என் பிள்ளை ராஜ்கபூரைவிட அவர் இளையவர் தானே!" என்றும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கேஸ்வரராக நடித்த மனோகர் நன்றி தெரிவிக்கையில் பிருதிவிராஜ்கபூரின் நன்றிகளைப் பெற்ற இக்கணவில் என்னுடைய இன்பக்கனவுகளெல்லாம் நனவாகிவிட்டதெனறார்.

பிருதிவிராஜ்கபூர் தமது மனைவியுடன் நாடகத்தைப் பார்த்தார்.

---

### புதிய தயாரிப்புகள்

**ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை'**

ஸ்ரீதர் கதைவசனம் எழுதி டைரக்ட் செய்யும் 'வெண்ணிற ஆடை'யின் படப்பிடிப்பு விஜயாவில் நடைபெறுகிறது. இப்படத்தில் நடிப்பதற்கான புதுமுகத் தேர்வும் இதே சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. புதுமுகங்களான ஜெயலலிதா, ஸ்ரீகாந்த் ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படப்படுகின்றன.

●

**அசோகன்-விஜயா 'கல்யாணமண்டபம்'**

அசோகனும், கே. ஆர். விஜயாவும் பிரதம பாகத்தில் நடிக்கும் கல்யாணமண்டபத்துக்கான படப்பிடிப்பு மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் ஆரம்பமானது.

கணவனுக்காக மனைவி செய்யும் தியாகத்தை சித்தரிக்கும் விதத்தில் இக்கதையை எழுதியுள்ள மா. ரா. வே, இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

ஆனந்தன், நாகேஷ் மனோரமா ஆகியவர்களும் நடிக்கும் இப்படத்திற்கான கவிதைகளை வாலி எழுதியுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் இப்படம் வெளியாகுமென்று மா. ரா. வே. தெரிவித்துள்ளார்.

●

**பாலச்சந்தரின் 'நடு இரவில்...!'**

பொம்மையைத் தயாரித்து அளித்து அதன் மூலம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற எஸ். பாலச்சந்தர் அடுத்துத் தான் தயாரிக்கும் படத்திற்கு 'நடு இரவில்' என்று பெயர் சூட்டியுள்ளார். தயாரிப்பாளர் எஸ். பாலச்சந்தரே கதை, இசை அமைப்பு, டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுள்ளார். வசனம் பாடல்களை வே. லட்சுமணன் எழுதுகிறார்.

●

**'படித்த மனைவி' வெளிவருகிறாள்!**

தயாரிப்பாளர் என். கிருஷ்ணசாமியின் டைரக்ஷனில் உருவான 'படித்த மனைவி' படப்பிடிப்புகள் எல்லாம் முடிந்துவிட்டன.

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர் ராதா, எஸ். வி. ரங்காராவ், மாஸ்டர் சுரேஷ், மனோரமா ஆகியோர் நடிக்கும் இப்படம் "யார் யார் என்னை என்னை எப்படி எப்படி எண்ணுகிறார்களோ; அவர்களுக்கெல்லாம் அப்படி அப்படிக் காட்சி தருவேன்" என்ற கீதையின் வாக்கியத்துடன் இப்படம் தொடங்குகின்றது.

●

**'பணம் தரும் பரிசு'**

சூர்யா பிலிம்சாரின் 'பணம் தரும் பரிசு' அண்மையில் விஜயா ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டது.

'பருவம் ஓட்டிப்
பழகும்போது
உருவம் மட்டும்
விலகுது'

—திருச்சி சௌந்தரராஜனும் பி. ஆர். திலகமும் ஆடிப் பாடி நடிக்கும் இக்காதல் காட்சியை வர்மரா [illegible]

---

படத்திற்குத் தஞ்சைவாணனும், இசையைச் செல்லத்துரையும், நடனத்தை ரத்ன குமாரும் அமைத்தனர்.

●

**திருவிளையாடல்**

நடிகர் டி. ஆர். மகாலிங்கம் ஒரு நாட்டியக்காரியைக் காதலித்தார். இதயங்களால் இணைக்கப்பட்ட அவர்கள் இருவரும் சிட்டுக்குருவிகளாக இன்ப வெள்ளத்தில் எங்கெல்லாமோ சிறகடித்துப் பறந்து திரிகிறார்கள். பூந்தோட்டம், சினிமா, பிச்னிக் இப்படியாக... இதனால், ஒருநாள் நடிகரால் குறித்த நேரத்துக்கு வீட்டுக்கு வரமுடியவில்லை. அங்கு அவருடைய அண்ணி அவருக்காக காத்துக்கொண்டிருந்தாள். பயந்து பயந்து வந்த நடிகரை அண்ணி தடுத்து நிறுத்தினாள்; நடிகரின் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்தாள்; புத்தகத்தைத் தட்டிப்பார்த்தாள். உள்ளே - அஹா! அதிர்ச்சியைத்தரக்கூடிய ஒரு பொருள் இருந்தது; அது வேறொன்றுமல்ல! டி. ஆர். மகாலிங்கமும் ஒரு அழகிய பெண்ணும் சேர்ந்து எடுத்த புகைப்படம்!

ஆமாம்; மேல் எழுதிய சம்பவம் நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் வீட்டில் நடந்த உண்மையான சம்பவம் என்று எண்ணுகிறீர்களா? இல்லை, இல்லை- ஜெய்குமார் பிக்சர்ஸாரின் 'கடவுள் தந்த பரிசு'க்காக மெஜஸ்டிக்கில் எடுக்கப்பட்ட ஒரு காட்சிதான் இது! அண்ணியாக பானுமதி நடிக்கிறார். நகைச்சுவைப் பாத்திரத்தை ஏற்று நடிகர் கே. ஏ. தங்கவேலு நடிக்க, மக்களன்பன் இப்படத்தின் கதைவசனத்தை எழுதுகிறார்.

---

## புதிய நாடகம்

சமீபத்தில் 'அஞர்கலி' என்னும் நடகத்தை அரங்கேற்றிய இணுவில் மூத்தமிழ் நாடக மன்றத்தினர் "பொதுப் பணத்தில் கை வைக்காதே" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் ஒன்றை அரங்கேற்றவிருக்கின்றனர்.

# "ஐயோ!... என்ன வடிவான பாலன்!... பச்சைப் பால் போலே முகம்!... பட்டுப்போலே கைகள்!... பஞ்சு போலே பாதங்கள்!... ரோஸாபோலே நிறம்!... ஐயோ எவ்வளவு வடிவு!... ரோஸ்மலர் ஆசைதீரத் தன் செல்வத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

## ஆனால்... ஆனால்...

# கனவு

ந. கிருஷ்ணசிங்கம்

எங்கும் ஒரே கும்மென்ற இருட்டு. வானம் இடைவிடாது சிணுங்கிக் கொண்டிருந்தது. அந்த மார்கழிமாதக் கடுங்குளிர் மரஞ்செடிகளையும் கூனவைத்தது. மரத்துப்போன மனிதர் மரமாய்த் தடியாய் உலாவிக்கொண்டிருந்தார்கள். மூலையிலே முடங்க முயன்ற மனங்களைப் பாலனின் பரவசப்பிறப்பின் நினைவு நிமிர்த்தி நிறுத்தியது.

கடல் வெளியில் இருந்து வீசிய கடுங்குளிரையும்—மழைத் தூறலையும்—பேயிருட்டையும் பொருட்படுத்தாது, குழந்தை குஞ்சு முதல் கிழடு கட்டை வரை அந்த சாமக் தேவதைகளைப்போல் அற்புதப் பாலனின் அதிசயப் பிறப்பைக் காண மாதா கோயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

விடிந்தால் நத்தார். வீடுகள் எங்கும் பலகாரமணம். குழந்தைகள் மத்தியிலே ஒரே குதூகலம். பட்டாஸ் வெடிகளின் கணநேரச் சப்தம் காற்றிலே தேய்ந்து மறைந்து கொண்டிருந்தது. ரோஸ்மலர் விளக்கைத் தணித்துவிட்டுப் பாயிலே விழுந்து புரண்டாள். அவளின் இதயம் வேதனையிலே வெந்து கருகியது. பற்பல நினைவு இழைகள் எழுந்து எழுந்து அவளின் மனத்திலே சிந்தனைச் சிக்கலைப் பின்னியது. மனவேதனைக்கேற்ப அவளின் நாசிக் குழாய்களைப் பிளந்து நெடுமூச்சு நெருப்புக்காற்றாய் இறைத்தது. ஊர் எங்கும் உயிர்விட்ட உற்சாகம் அவளின் உயிரை மட்டுமேன் உறிஞ்சுவான்...? பாலனின் பிறப்பின் நினைவு ஏன் அவளைமட்டும் பயித்தியக்காரியாக்குகிறது?

"ரோசுமலர்! வாறியா பூசைக்கு!" தாயின் அழைப்பு அவளுக்கு எரிச்சலைத்தான் மூட்டியது. அவள் பேசாது பாயிலே புரண்டாள். அன்னையின் அந்த அழைப்பு வீட்டில் எதிரொலித்து வீணே காற்றில் கரைந்தது. ரோஸ்மலரின் சிந்தனையில் தேங்கி நின்ற நினைவுகளின் சங்கமம் அவளின் பேசும் சக்தியையும் பிடுங்கி விட்டது.

∴ ∴ ∴

அலையின் முதுகிலே சவாரி செய்து—திரைகடலுள் திரவியம் தேடும் மீனவர் கூட்டத்துள் அந்தோனிமுத்துவும் ஒருவர், செம்பட்டைத்தலை—திரண்ட உடலமைப்பு—கழுத்திலே சிலுவை—வயிறு வெற்றிலைக்காவி ஐம்பது வயதுக்கு மேல் என்றாலும் நாற்பதுக்குக் குறைந்த தோற்றம். இவர்தான் அந்தோனிமுத்து.

"அந்தோனிமுத்து பெரிய பெருமை பிடித்தவன்" — இது அவரைப்பற்றிய ஊர் அபிப்பிராயம். அதற்கேற்றபோல் அவரும் நடந்து கொண்டார். பலத்த சீதனப்போட்டியின் மத்தியில் அவர் 'மாஸ்டர் மரியதாசை'த் தூண்டில் போட்டுப் பிடித்துவிட்டார். முயன்று முடியாதவர்கள் முழிசிப்பார்க்க, அவரின் ஒரே மகள் ரோஸ்மலரின் திருமணம் தடல் புடலாய் நடந்து முடிந்தது.

'மாஸ்டர் மனைவி' ஆகிவிட்டதை எண்ணி ரோஸ்மலர் அடிக்கடி தன் அழகிய உதடுகளைத் திறந்துகொண்டாள். இருந்தாலும் மரியதாஸ் மணப்பிணைப்பு அந்தோனிமுத்துவின் குடும்ப கௌரவத்தை ஒரு உயர்த்து உயர்த்திவிட்டது என்றால் அது மிகையல்ல.

மரியதாஸ்—ரோஸ்மலர் மணவாழ்வில் மலர்மணம் வீசிய காலத்தில் அதைப் பார்த்து பல்லை இளித்தபடி அந்தோனி முத்து கண்ணை மூடிவிட்டார்.

அதன்பின் அவள் வாழ்வில் பாம்புகள் படம் எடுத்ததையோ—கழுகுகள் பறந்ததையோ—கோட்டான்கள் குளறியதையோ அறிய அவர் இங்கு இல்லை.

நாட்கள் நகர்ந்தன—மாதங்கள்—வருடங்களும் வந்து போயின. மார்கழிமாதக் கடுங்குளிர்... ஓயாத மழைத் தூறல்... கும்மென்ற பேயிருட்டு... பாலனின் பரவசப் பிறப்பு... இவையாவும் அந்தஐந்து ஆண்டில் ஐந்து முறையும் வந்து சென்றன. அதுபோல் ரோஸ்மலரின் மணவாழ்விலும் துன்பமென்ற பேயிருட்டுச் சூழ்ந்தது... துயரமென்ற கடுங்குளிர் மூடியது... கண்ணீர் என்ற மழைத்தூறல் வந்தது. அவள் என்ன செய்வாள்? அவள் மணவாழ்வில் பாலனின் பரவசப் பிறப்பு நிகழவேயில்லை.

"மலடி!" ஆம், அவளின் ஐந்தாண்டு மணவாழ்வு அவளுக்கு அளித்த பட்டம் அதுதான். அவளின் வயிறு கருவளரமுடியாத கானலாம்! அவளின் வாழ்வு வாரிசு அற்ற வெறும் வெளியாம்! அவள் தாயாக முடியாத தறுதலையாம்!

கணவன்—மனைவி என்ற நிலைமறந்து, நாயும்—பூனையும், கீரியும்—பாம்பும் என்ற நிலைக்கு ரோஸ்மலர் — மரியதாஸ் மணவாழ்வு வந்தது. முடிவு... காலாகாலமெல்லாம் காட்டிய பாதை விலகாது—பிணைத்த கைபிரியாது—தாங்கள் இணைத்த உறவு இனித்து வளரும் என்றெல்லாம் எண்ணி, வாழ்வாங்கு வாழ வாழ்த்திய பெரியோர்களின் ஆசீர்வாதங்கள் அழிய மரியதாஸ்—ரோஸ்மலர் மணவாழ்வு முறிந்தது. அவன் வாழ வேறுவழி தேடிப் பிரிந்தான். அவளோ வாழாவெட்டியானாள்.

∴ ∴ ∴

"ஆச்சி...ஆச்சி...! இப்படி என்ரை அருகிலை பிள்ளையைத் தூக்கிக் கிடத்தனை. ஐயோ! என்ரை பச்சைப் பாலனைத் தனியனாய் ஏன் தொட்டிலிலே போடுவான்? ஐயோ...! அது குளிரிலை கிடந்து எப்பிடி நடுங்குதுபாரனை! ஆச்சி...எணை...! இப்பிடி எனக்குப் பக்கத்திலை தூக்கிக் கிடத்தனை!" ரோஸ்மலர் தன் இனிய செல்வத்தைத் தாவிக் அணைக்கத் துடித்தாள். "இதுக்குத்தான் நான் ஆஸ்பத்திரிக்கு மாட்டேன் என்று சொன்னது. கண்டறியாத சட்டங்களும் கட்டுப்பாடுகளும் போடுகினம். பிள்ளையையும் தாயையும் ஒன்றாய்க் கிடத்தினால் என்ன...! எணை ஆச்சி—!"

"சும்மா கிடவடி பெட்டை... நேசமார் வந்தால் பேசவினம் — என்னையும் பிறகு இஞ்சை நிற்கவிடாமல் துரத்துவினம்"—ரோஸ்மலரின் தாய் முணுமுணுத்தாள்.

"இதுகள்தான் இவைக்கு இவ்வளவு கடப்புக் கொடுக்கிறது" — ரோஸ்மலர் தாயை எண்ணி எரிந்து விழுந்தாள்.

அவளின் தாய்க்கு என்ன தோன்றியதோ தன் பேரனைத் தொட்டிலில் இருந்து தூக்கி மகளின் மெத்தையிற் கிடத்தினாள்.

"ஐயோ என்ன வடிவான பாலன்!...பச்சைப்பால்போலே முகம்!... பட்டுப் போலே கைகள்!... பஞ்சுபோலேப் பாதங்கள்! ரோஸா போலே நிறம்! ... ஐயோ! எவ்வளவு வடிவு" ரோஸ்மலர் ஆசைதீரத் தன் செல்வத்தை மார்போடு அணைத்து அணைத்துத் தடவினாள்.

"என்ன ராசா! ... ஏனடா சிரிக்கிறாய்? ... ஆரைப் பாத்தடா சிரிக்கிறாய்? ... அம்மாவைப் பாத்தோ! ...ஓ.. ஓ... அம்மாவைப் பாத்துச் சிரிக்கிறீங்களோ!...என்ரை பாலன்! —என்ரை கிளி! என்ரை பாக்கியம்!—என்ரை செல்வம்!" — ஆசைதீரத் தன் அஞ்சுகத்தை ரோஸ்மலர் அணைத்து அணைத்துக் கொஞ்சினாள்.

பேரனைப்போல அவளின் தாயும் திறந்தவாய் மூடாமற் சிரித்தபடி நின்றாள்.

ரோஸ்மலர் தன் தாயை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் மனமலர்ச்சி கண்களில் மின்னின. எட்டாத மலையைத் தொட்டு விட்டவள் போன்ற பெருமிதம் அவள் முகத்திற் பூத்துநின்றது.

"எணை ஆச்சி!... அவருக்குச் சொல்லி அனுப்பினனியா?... சீச்சீ இப்படியுமா ஒரு மனிதர் இருப்பினம்! எனக்குப் பிள்ளை பிறக்காதாம்... அவர் விட்டு விட்டுப் போட்டாராம்! இப்ப வந்து பாக்கட்டுக்கும்!... வரட்டுக்கும்... வரட்டுக்கும் ... என் செல்வத்தைக் கொண்டு அவர் மூஞ்சையில் உதைப்பிக்கட்டுபார்!"

அவளின் வாய் எதை எதையோ முணங்கிக்கொண்டன. அவளின் நெஞ்சத்தில் மிதந்து சென்ற நினைவுகளின் நிழல்கள் அவளின் முகத்திலும் மின்னி மறைந்தன.

பாலனின் புனிதப்பிறப்பை மாதாகோவில் மணியோசை நள்ளிரவின் நிசப்தத்தைக் கிழித்து நாற்திசையும் அறிவித்தது. கிறிஸ்தவர்கள் எழுந்து அமர்ந்துபிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். அந்த அகாலசாமம் பன்னிரண்டு மணிக்கு அந்தப்பகுதி வீடுகள் எல்லாம் அன்று உயிர்பெற்று ஒளிவீசின. மணிகளின் ஓசை—வெடிகளின் தொடர்ந்த ஒலி—மக்களின் பிரார்த்தனைக் கீதங்கள் ... எல்லாம் ஒன்றுகலந்து ஒரு குதூகல நிலையை நிலவச் செய்தன. பாலன் பிறந்தான், பாலன்பிறந்துவிட்டான். நத்தார் வந்துவிட்டது.

யாரோ திடீரெனப் பிரம்பால் அடித்ததுபோல், ரோஸ்மலர் துடித்துப் பதைத்து எழுந்தாள், அவளின் கண்கள் கணப்பொழுது பம்பரமாகச் சுழன்றன. பெருமலையில் தத்தித் தத்தி ஏறியவள் தலைகீழாய் விழுந்துவிட்டதுபோல் உணர்ந்தாள்.

ஐயோ! அந்த அதிர்ச்சியை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்! கண்முன்னே நின்றதெல்லாம் கணப்பொழுதில் மறைந்துவிட்டனவே!

கட்டில் இல்லை-மெத்தை இல்லை-தொட்டில் இல்லை-ஆஸ்பத்திரியே அங்கு இல்லை. அவள் படுத்திருந்த பாயிலே பாலனுக்குப் பதில் ஒருபஞ்சுத் தலையணைதான் கிடந்தது.

அவள் கண்டது என்ன? அவள் எண்ணியவை என்ன? அவள் பேசியவை என்ன? கனவு-கனவு- எல்லாம் கனவு! ...பயங்கரமான கனவு!

அவள் மலடியே தான்!... அவள் வயிறு கருவளரமுடியாத கானலேதான்! அவள் வாழ்வு வாரிசு அற்ற வெறும் வெளியேதான்!...

[illegible]ணைத்தாற் சிருஷ்டித்த மணி வைகிலி-பாலனை பக்கத்தில் மகிழ்ந்து மயங்கிக் கிடந்த ரோஸ்மலர் தான் இருக்கும் உலகம் வேறு என்பதை அறிந்து இடிக்கும் தன் இதயத்தை-துடிக்கும் தன் உள்ளத்தைப்—பதறும் தன் கரங்களால் இறுகஅழுத்தினாள்.

நினைவின் வேகம் - கனவின் தாக்கம்-பாலனின் நாசம்...எல்லாமாகச் சேர்ந்து அவளை மீண்டும் பிடித்துப் படுக்கையிலே தள்ளின. தலை இடியாய் இடித்தது-உடல் நெருப்பாய்க் கொதித்தது. அவளுக்குக் காய்ச்சல்...வாழ்வே காய்ந்து உலர்ந்தபின் உடல் காய்ச்சல் அவளை என்ன செய்யும்!

ரோஸ்மலர் பூசைமாடத்தைப் பார்த்தாள் அங்கு அவளிடம் கனவிலே பிறந்து களிப்பூட்டிய பாலன் கன்னிமேரியின் கைகளில் இருந்தபடி அவளை நோக்கிச் சிரிப்புகாட்டிச் சிறுகை நீட்டினான். ரோஸ்மலரின் காய்ந்த உதடுகள் அசைந்தன "பாலா!... நீ என்னை ஏமாற்றி விட்டாய்... நான் என் கைகளை நீட்டமாட்டேன் நீ என்னிடம் இறந்தாய் வரமாட்டாய்!... இனி நீ என்னிடம் வரவே முடியாது..." ரோஸ்மலரின் கண்ணீரில் மிதந்த விழிகள் இரண்டும் பாலனில் இருந்துமீண்டு சுவரிலே மாட்டியிருந்த அவள் மரியதாஸின் புகைப்படத்தில் வந்து நிலைகுத்தி நின்றன.

"ஓயேசுவே இரட்சியும்" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

(யாவும் கற்பனை)

## ஞாயிறு கதை மலர்

# வீரம்!

- பொ. சண்முகநாதன் -

"ஒரு கன்றை விடுகிறதா ஒரு கடியை விடுகிறதா, இந்தனரா வீட்டு நாசமாய்ப் போன மாடுகள்! கட்டி வளர்க்க இந்த நாசமாய்ப் போவாருக்கு என்ன கொள்ளையோ கோதாரியோ தெரியவில்லை" என்று திட்டிய வீட்டுத் தலைவன் "சூ...சூ... ஓடடா வீமா..." என்று தனது நாயைச் சூக்காட்டி மாட்டைக்கலைக்க ஏவினர்.

"சூட்... சூ... சூட்... சூ" என்று ஏககாலத்தில் பல குரல்கள் தொடர்ந்து அந்த நாய்க்கு வீரத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிக் கொண்டிருந்தன.

மாடு வாலைக் கிளப்பியபடி ஓடிக்கொண்டிருந்தது; நாய் அதைத் துரத்திக் கொண்டிருந்தது. இரண்டும் 'இதற்குமேல் இல்லை' என்ற வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தன.

அந்தப் பெரிய வளவில் இந்தப் பந்தயம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

"அதோ... அதோ... நாய் இன்னும் சிறிது வேகமாக ஓடினால்... அல்லது மாடு இன்னும் சிறிது தாமதித்தால்..." முடிக்கவில்லை பெரியவரின்மூத்த மகன்.

"...நாய் மாட்டின்மேல் பாய்ந்து அதைக் கடித்து கீறிக் கிழித்து எறிந்துவிடுமே!" என்று முடித்தான் பெரியவரின் இளைய மகன்.

ஓட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாடு சிறிது களைத்துவிட்டது போலும்! அவைகள் இப்போது இரண்டே இரண்டு அடி தூர வித்தியாசத்தில் ஓடிக்கொண்டிருந்தன

"ஓடடா வீமா...சூட்...சூ" உற்சாகமூட்டினார்கள் வீட்டுக்காரர்கள்.

அதோ வளவின் எல்லை வேலியைத் தாண்ட வேண்டிய அபாயம் மாட்டுக்கு வந்துவிடுகிறது. ஓடி வந்த மாடு ஐயோ சிறிது தாமதிக்கிறது...

நாய்—!

மாட்டின் மேல் பாய்ந்து அதைக் கடித்து கீறிக் கிழித்து எறிந்துவிடவில்லை. அப்படியே நின்று குரை குரையென்று குரைத்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது மாடு ஒரு படி வேலிதண்டி மீண்டும் ஓடிக்கொண்டிருந்தது. நாய்—?

மீண்டும் அதை வீரத்துடன் துரத்திக்கொண்டிருக்கிறது.

# விஞ்ஞானக் கூத்து

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்பா: "அடுக்குமொழி வேண்டாமடி - அடி அடி அடி- உன் ஆணைப்படி நடப்பேன் அல்பாத் துரையுனே...!

பர்வ: வீட்டுக்கு வருவேனோ. சொல்கிறேன்...!

"வீட்டுக்கரசி நானே - விஞ்ஞானப் புலவரென் அடிமைகளே...!

(போகிறான், கோபமாய்)

அல்பா: அவன்கோபம் அல்பாக்கதிரினும் அபாயம். அவன் ஊடலைத் தீர்க்கிறேன்... டேருப், கவனம்! திராவகங்கள் ஜாக்கிரதை; நான் மிஸிட்ரி ஆபீஸ் சென்று வருவேன்...!

(போதல்)

(தொடரும்)

"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரி சேட்டுகள்
- சால் மேசுகள் (Nylon & Woolen)

லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 889

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 6உ (20-12-64)

# தூங்கும் சைவம்!

பேராதனை பல்கலைக்கழகத்தில் படிக்கும் சைவ மாணவர்கள் அங்கு தாங்கள் வழிபட ஒரு ஆலயம் அல்லது பிரார்த்தனை மண்டபமாவது வேண்டுமென்று ஒன்பது வருடங்களாக ஓலமிடுகிறார்கள். சைவ ஸ்தாபனங்களோ, சைவத் தலைவர்களோ இதைப்பற்றி எவ்வித கவனமும் செலுத்துவதாகக் காணோம்.

தென்னிலங்கையிலே மரவரித் திட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. அதனை பௌத்த மக்கள் ஒரே குரலோடு எதிர்த்ததால், அத்தீர்மானத்தை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டியதாயிற்று. ஆனால் வடமாகாணத்திலே சுமார் முப்பது ஆண்டுகளாக மரவரிமுறை புகுத்தப்பட்டு மதுபானம் அதிகரித்து, சமூக வாழ்வே சீர்குலைந்துள்ளது. குடியால் பலகுடும்பங்கள் நாசமாகின்றன. மாணவர்களிடையிலேயும் இப் பழக்கம் அதிகரித்துவருகின்றதாம். இதனால் இங்கு குற்றங்கள் பெருகுவதாக நீதிமன்றத்திலே ஒரு நீதி அரசர் பகிரங்கமாகக் கூறினார். என்றாலும் இதுவரை இதுபற்றி இங்குள்ள சைவ சமூகம் எவ்வித முயற்சியும் எடுக்க முன்வரக் காணோம். இது மிகவும் துக்கப்படவேண்டிய, வெட்கப்பட வேண்டிய நிலைமையாகும்.

புன்னாலைக்கட்டுவனில் ஒரு கூட்டத்திலே காரியாதிகாரி முருகேசம்பிள்ளை அவர்கள் இதைப்பற்றி ஆணித்தரமாகப் பேசியுள்ளார். தமிழ் பேசும் மக்கள் எந்தத் துறையிலும் இப்போது ஊக்கமும் விழிப்பும் உள்ளவர்களாகக் காணப்படவில்லையென்றும், சைவசமயம் எப்போது தூங்கத்தொடங்கியதோ அப்போதே தமிழுக்கும் தமிழருக்கும் பலம் குன்றியதாகவும் சுட்டிக்காட்டி, நாவலர் காட்டிய வழியைப் பின்பற்றி சைவத்தைப்பேணி வளர்க்க வேண்டுமென்றும் அதன் மூலமே விமோசனம்பிறக்குமென்றும் சரியாகக் கூறியுள்ளார்.

நாவலர் பெருமான் இன்று இருந்திருப்பின், பேராதனையிலே சைவ மாணவர்களுக்காக ஒரு பெரிய இந்துக்கோவில் கட்டத் தாமே முன்வந்து இதற்குள் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்திருப்பார். வடமாகாணத்திலே மரவரிமுறையை மட்டுமன்றி மதுபானத்தையே எதிர்த்துப்பெரும் போராட்டத்தை ஆரம்பித்து, இங்கு சைவமக்களை மது அரக்கன் பிடியிலிருந்து விடுதலை செய்திருப்பார். நாவலர் திருநாள் பல இடங்களிலும் கொண்டாடப்படுகின்றது. ஆனால் ஆக்க முறையிலே இன்று சைவசமூகத்திற்கு அவசியம் தேவையான காரியங்களைத் துணிச்சலுடன் செய்ய யார் முன் வருகிறார்கள்?

தொட்டதற்கெல்லாம் அரசியல் தலைவர்களையே நம்பி, சமூகத்தின் எல்லாக் கேடுகளையும் அவர்கள்தான் தீர்க்க முன்வர வேண்டுமென்று நம்மில் பலரும் தவறாக நினைக்கின்றோம். ஆனால் இச்சீர்திருத்த வேலைகளில் அரசியல் தலைவர்கள் இறங்கத் தயங்குகின்றார்கள். இதில் தலையிட்டால், வாக்காளர்களில் ஒரு சாரினரது ஆதரவு தங்களுக்குத் தேர்தல் காலத்தில் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பீதியே அதற்குக் காரணமாகும். ஆகவே அவர்களை நம்பியிராமல், சமூக சீர்திருத்த விஷயங்களில் சைவசமய ஸ்தாபனங்களே முன்வந்து வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டும். இன்றேல் வரவர சைவசமூகம் இன்னும் மோசமான நிலை அடையலாம். மற்ற சமயத்தவரையோ, அரசியல் தலைவர்களையோ குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. சைவமக்கள் தங்களுக்குத் தாங்களே சைவ நெறிப்படி நற்பணிகள் செய்துகொள்ள மற்றவர் யாரும் குறுக்கே நிற்கமுடியாது; நிற்கவுமில்லை.

பௌத்த ஸ்தாபனங்களும், தலைவர்களும் விழித்துக்கொண்டு தங்கள் சமயத்தவருக்காகச் செய்யும் நற்காரியங்களையும் பார்த்தபின்னராவது சைவர்கள் 'இன்னும் கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காமல்' புத்துணர்ச்சியுடனே திட்டமிட்டு சமூகத்திலுள்ள குறைபாடுகளை நீக்க முன்வரவேண்டும்.

சிறப்பாக சைவ வாலிபர்களிடையே இப்போது சமயப் புத்துணர்ச்சி ஏற்பட்டுவருவதைப் பார்க்கின்றோம். தங்கள் வாழ்க்கை செம்மையுற வேண்டுமாயின், தாங்கள் சமய நெறிப்படி நடக்க வேண்டுமென்பதையும் இன்றுள்ள சமூக இன்னல்களுக்கு அடிப்படைக் காரணம் சமய நெறிகளை அலட்சியம் செய்து கண்மூடி வாழ்க்கை வாழ்வதுதான் என்பதையும் அவர்கள் மெதுவாக உணர்ந்து வருகிறார்கள். அவர்களிடையே தெய்வபக்தியும் நம்பிக்கையும் வளர்ந்துவருவதற்கான பல நல்ல அறிகுறிகள் சமீபகாலமாகக் காணப்படுகின்றன. சைவ ஸ்தாபனங்களும், தலைவர்களும் இனியும் தூங்கிக்கொண்டிராமல், உண்மை சைவநெறிப்படி தாங்கள் வாழ்வதுடன், எதிர்கால சந்ததியினரும் வாழ எல்லா உதவிகளும் செய்யக் கடமைப்பட்டுள்ளனர். இதனால்தான சைவம் விழித்து புத்துயிர் பெற்று வாழமுடியும். திருவருளும் அப்போது தான் துணைசெய்யும்.

# திருவாதிரை திருநாள்



திருவாதிரையில் செய்யப்பெறும் சிவ தரிசனமே 'தரிசனம்' என்று சிறப்பித்துச் சொல்லப்பெறுகின்றது. இவ்விழாநாளில் எல்லாத் தேவர் கோட்டங்களிலும் வழிபாடு செம்மையாக நிகழ்வது, அவர் அனைவரும் சிவபெருமானது விழாவில் செவ்வனே வந்து சிறப்பிக்கின்றார்கள் என்பதையே குறிப்பதாகும். திருவாதிரைத் தரிசனத்திற்கு வாராத தேவர் இல்லை. ஆண்டாளுகிய சிவபெருமான் திருவுலா வருகி அணியுடை ஆதிரை நாளில், அவனை வணங்க ஆர் ஆர் வந்தார் என்ற கேள்வி எழுமானால் 'யார் வரவில்லை' என்ற கேள்வியே அதற்கு விடையாய் அமையும்.

"ஆரார் வந்தார்
அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான் முகன்
அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.
(திருமுறை)

தேவர்களே தவறாது தரிசிக்கும் இத் திருவாதிரை விழாவை மக்கள் தரிசியாதிருத்தல்கூடுமோ?

# எம்மையும் எம்முடையானையும் ஒன்றுவித்துந்தரும் மொழி

அசைவ பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தும் அதன் நோக்கத்தை நிறைவேற்றாமல் வாழ்வை வீணாக்குவர்பலர். ஆனால் நாயன்மார்கள் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவியின் குறிக்கோளை நிறைவேற்றியவர்கள். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை அருள் வாழ்க்கையாகும். அந்த வாழ்க்கையிலே அவர்கள் அந்த [illegible] ஆனந்தமடைந்தார்கள். தாம் பெற்றதோடமையாது பிறருங் காணவேண்டுமென்று விரும்பினார்கள். அந்த விருப்பின் பயனாகத் திருமுறைகள் எழுந்தன. திருமுறைகள் எழுந்த காலத்துக்கும் எமக்குமிடையில் எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் இன்று நம் சமயவாழ்க்கைக்கு இத்திருமுறைகளே வழிகாட்டிச் செல்கின்றன. திருமுறைகளின் மூலம் சைவமும் தமிழும் மலர்ச்சி பெற்றன.

திருமுறைகளில் எட்டாந் திருமுறையாக அமைந்தது திருவாசகம். "திருவாசகத்துக் குருகாதவர் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்பது முதுமொழி. இந்த ஞானநூலை முற்றும் உணர்ந்த இராமலிங்க சுவாமிகள் "எம்மையும் எம்முடையானையும் ஒன்றுவிக்கும் மொழி" என்று போற்றினார். [illegible] அனுபவ நிலையில் வைக்கக்கூடிய சக்தி திருவாசகத்துக்கு உண்டு.

அடிகள் முதலமைச்சராகப் பெரியபதவியை வகித்த காலத்திலேயும் "கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறு ஆகுமா போல் நீத்தனர் மனத்தில் முன்போல் நிகழ்ச்தினர் வழுதி நீதி" என்று அவர்கள் வாழ்ந்த நிலையைத் திருவாதவூரடிகள் புராணங்கூறுகிறது. அடியார்களுடைய மனத்திலே எழுந்த அவாவை நிறைவேற்றும் ஒரு சாதனமாகத் திருப்பெருந்துறைத் தரிசனங்கிடைத்தது. திருப்பெருந்துறையிலிருந்த மர நிழலிலே இறைவனாகிய குருமணியிடம் ஞானோபதேசம் பெற்றபின்பு அவருடைய நிலை பேய் பிடித்தவனுடைய நிலைக்குச் சமமாகிவிட்டது. இறைவனுடைய பிரிவை அவரால் சகிக்க முடியவில்லை. "நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னையாரறிவார்" என்று அரற்றினார். [illegible] வைக் காணாது [illegible] தவித்தார். தவித்துத் தவித்துப் புலம்பிய புலம்பல்களின் தொகுதியே திருவாசகம். "நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே." திருவாசகம் படித்த போது தமக்குண்டாகிய அனுபவத்தை இவ்வாறு கூறுகிறார் இராமலிங்க சுவாமிகள்.

திருவாசகத்தைத் தேனுகச் சுவைத்தார்கள் பக்தர்கள். தேன் தூயமலரிலே தோன்றுவது. திருவாசகம் மாணிக்கவாசகருடைய இருதயமலரிலே உதயமானது. தேனை உடல் நோயை நீக்குகிறது திருவாசகம் உயிர் நோயை நீக்குகிறது. தேன் குடிக்கக் குடிக்க களிப்புண்டாவது போல் திருவாசகத்தைப் படிக்க ஆனந்தக் களிப்புண்டாகிறது. தேன் மருந்தும் உணவும் ஆவது போல் திருவாசகமும் மலமகற்றும் மருந்தும், ஞானிகளுக்கு அமுதமும் ஆகிறது. இதனாற்றான் திருவாசகத்தைத் தேனுகக் கண்டனர் போலும்.

திருவாசகத்தில் பல சுவையான பகுதிகள் உண்டு. அவற்றில் இரண்டொரு இடத்தைக் காட்டுவோம்.

"தந்ததுன் தன்னைக்
கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்
கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா
ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற
தொன்றென்பால்"

இறைவனுக்கும் தனக்குமிடையில் நடந்த பண்டமாற்றை விளக்குகிறார். பண்ட

(12-ம் பக்கம் பார்க்க)

# அன்னை சாரததேவி



தெய்வீக ஸ்ரீ சாரதாமணி தேவியே
ஜெகமெலாம் உய்யவே திருவுருவெடுத்தாய்
ஸ்ரீ ராமகிருஷ்ண சற்செய்தி கொணர்ந்தாய்
தெய்வத்திருமலர்த் துணையடி தந்தாய்.

அம்மையும் அப்பனும் ஓருயிர் ஓருருவுமாய்
ஆருயிர்க்கெல்லாம் ஞானமுதம் ஊட்டி
பேரருள் காட்டி பேரானந்தம் கூட்டி
பேரின்ப வீட்டின் ரகசியம் தந்தாய்

—பஜனுவளி.

(இன்று அன்னை சாரதாதேவியின் ஜ[illegible])

ஈழநாடு



# நத்தார் அனுபந்தம்


தொலைபேசி: 585 தந்தி மன்சூரு

எங்கள்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்
அனைவருக்கும்
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள் உரித்தாகுக
கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


## நீதியின் மார்க்கத்திலே நிரந்தர வாழ்வு

— டாக்டர் ஏ. ஜே. அடைக்கலம் —

## பேரின்பநாதன் பிறந்தனனே!

பாலன் பிறந்த திருநாளே - எங்கள்
பாலைய அகலற பெருநாளே
சீலன் உதித்த திருநாளே - இன்று
சேர்ந்து வணங்கும் பெருநாளே,

காரிருள் மேவிய காலமதே - மக்கள்
காசினி மீதில் உறங்கிடவே
பேரின்ப நீடும் பெருமானே - எங்கள்
பேரின்ப நாதன் பிறந்தனனே.

கன்னி மரியவள் ஈன்றெடுத்திடவே - எங்கள்
காவலன் ஆசை களிட புறலே
விண்ணிற் பெரும்சோதி தோன்றிடவே - கண்ணிற்
கண்டே வியந்தனர் ஆயிடையர்.

உன்னதமாகிய தேவனுக்கும் - உயர்
மண்ணில் உதித்த மணிதருக்கும்
நண்ணும் தொடர்பினை ஆக்கிடவே - எங்கள்
நாதன உதித்தனன் நானிலத்தே.

என்றே அசரீரி கேட்டிடவே - ஆயர்
ஏகின ரேயேக பாலனிடம்
நன்றே மகிழ்ந்தனர் பாலனையே - கண்டு
நின்று வணங்கினர் தெண்டனிட்டே.

மன்னவர் மூவர் வரும் வழியே - நின்று
கண்டனன் ஏரோது ராசனுமே
மன்னவரே நீவிர் எங்கே தொடர்கின்றீர்
என்றிடவே மன்னர் தாமுரைத்தார்.

மன்னுயிர் ரட்சகர் வந்தாரென்றே - இன்று
வானத்தில் மாசோதி காட்டியதே
அன்னவர் தன்னைத் தரிசிக்கவே - நாங்கள்
ஆவலுடன் வழி வந்தோமையா.

வந்தனர் கண்டனர் வந்தனை செய்தனர்
வாழ்வுக் குறுதுணை வானவனை
பொன்வெள்ளி மீறையும் பாதத்திலேவைத்துப்
போற்றிப் பணிந்தனர் பாலனையே,

மானுடர் பாவத்தைத் தீர்த்திடவே - எங்கள்
மாதவன் வந்து உதித்தனனே
பேணிநீவிர் அவன் போதனையே - என்றும்
காணிடுவீர் சொர்க்க போகமதே.

—அரியாலையூர் வே ஐயாத்துரை

நீதிமான்களின் யதார்த்தம் அவர்களை வழிநடத்தும். துஷ்டரின் சதியோ அவர்களை நாசமாக்கும். யதார்த்தவாதியின் நீதி அவன் மார்க்கத்தைக் காக்கும். அக்கிரமி தன் அக்கிரமத்திலேயேவீழ்ந்து மடிவான். நல்லவர்களின் நீதி அவர்களை விடுவிக்கும். துஷ்டர்களோ தங்கள் சதிமார்க்கங்களிலேயே சிக்கிக்கொள்வர்.

இவ்வாசகங்கள் பைபிளில் பழமொழி ஆகமத்தின் அநுபூதி வாக்குகள். வாழ்க்கையின் பல சூழ்நிலைகளுக்கேற்ற நீதி வாக்கியங்களை வழங்கிய ஞானி சாலமோன் அரசவில் அநுபவம்மிக்கவர். ஆ புரியதிலே ஒப்பற்றவர். நீதியிலே நிபுணர் அவருடைய தீர்க்கமான வசனங்கள் அனைத்தும் ஆழ்ந்த ஞானம் பொதிந்தவை. அவர் கூறுவதுபோல, நீதிமான்கள் என்றும், எங்கும் யதார்த்தமாகவே பேசுவார்கள், பழகுவார்கள், நடந்தும் கொள்வார்கள். அவர்களுடைய நியாயமான பேச்சும் செயலும் அவர்கள் கொள்கையைக் காக்கும், வளர்க்கும், பிறரைக் கவர்ந்து இழுக்கவும் உதவும். இவர்கள் மக்களின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைக்க பேராவல் கொள்ளுவார்கள். இதற்குமாறாக துஷ்டர்களோ வஞ்சகமான முறையிலே நடந்துகொள்ளுவார்கள்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்கள்; கெஞ்சினால் மிஞ்சுவார்கள், மிஞ்சினால் கெஞ்சுவார்கள். அநியாயமான வழிவகைகளையும் அக்கிரமமான முறைகளையும் கையாள பின்வாங்க மாட்டார்கள். பொய்யும் பித்தலாட்டமும் சதிகாரத்தனமும் லஞ்சமும் இவர்களுக்கு சர்வசாதாரணம். இவர்களால் நன்மை எதுவும் ஏற்படுவதில்லை. எனவேதான் ஞானி கூறினார், "கபடன் தன் சிநேகிதனை வாயினால் கெடுக்கிறான்; நீதிமான்களோ நன்மையான போதகத்தால் காப்பாற்றப்படுகிறார்கள். நீதிமான்களின் உடமையைப் பார்த்து நகரம் களிகூரும். அக்கிரமிகளின் அழிவைப் பார்த்து மக்கள் மங்களம் கூறுவர். நல்லவர்களின் ஆசீர்வாதத்தால் நாடு செழிக்கும் துஷ்டர்களின் வாக்கினாலே நாடு அழிந்துவிடும்" என்று.

இவையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது ஞானி சாலமோனைப் போல நாமும் இந்த முடிவுக்குத்தான் வருவோம் நீதியையும் இரக்கத்தையும் பின் செல்பவன் ஜீவனையும் மகிமையையும் கண்டடைவான். நீதியின் மார்க்கத்திலே நிரந்தர வாழ்வு உண்டு; கோணல் வழியோ மரணத்துக்குக் கூட்டிச்செல்லும்.

ஆம், நேர்மையாகவும் நீதியாகவும் நடந்து கொள்ளும் மக்கள் அக்கிரமிகளின் பயமுறுத்தல்களைக்கண்டு எக்காரணம் கொண்டும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் இறைவனே நீதிமான்களை பரிவுடையோராக கண்காணித்து வருகிறார். ஆண்டவருடைய விழிகள் நீதிமான்கள் பேரிலும், அவருடைய செவிகள் அவர்கள் செய்யும் மன்றாடுதல்கள் பேரிலும் எப்பொழுதும் இருக்கின்றன என்று தாவீது அரசர் உறுதி கூறுகிறார். என்ன அவர்களுக்கு எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் அதனால் சித்தம் கலங்காமல் அணிவேலை இருந்த இடம் தெரியாமல் பறந்தோடிப் போகும். "ஆண்டவரை நோக்கி, நீதிமான்கள் அபயமிட்டார்கள். இறைவன் அவர்களது வேண்டுதல்களைக் கேட்டு, அவர்களுக்கு நேரிட்ட சகல துன்பங்களினின்றும் அவர்களை மீட்டருளினார் நீதிமான்களுக்கு அநேக துன்பங்களுண்டு. இவையாவற்றினின்றும் ஆண்டவன் அவர்களை மீட்பார்" என்றசங்கீத மொழிகள் எவ்வளவோ நம்பிக்கையூட்டுகின்றன.

புனித அப்போஸ்தலர் சின்னப்பர் சொன்னாற் போல நீதிமான் விசுவாசத்தினால் ஜீவிக்கிறான். கடவுளிடத்தில் ஆழ்ந்த விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டுள்ள மக்கள் நீதிநெறி வழுவாது வாழ்வேண் முழுதும் பிரயாசைப்படுகிறார்கள். அவர்களுடையநல்லுணர்வும் நற்பண்பும் அன்புள்ளமும் அழியாத சமாதானத்தை நிச்சயம் அவர்களுக்குத் தேடித்தரும். இதோ கிறிஸ்து நாதன் பிறப்புவிழாவை நினைவுகூரும் போதெல்லாம் தேவதூதர்கள் எங்கும் முழங்கிய கீதம் கேட்கிறது: உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமையும் பூவுலகத்தில் நல்மனதுள்ளோருக்குச் சமாதானமும் உண்டாவதாக.



## தருமமெனும் தவநெறியே

அன்னைமரி அகமகிழ
அனைத்துலகும் மேன்மைபெற
மன்னவனாய் மதலையுரு
மகிழ்ந்தேற்ற திருப்புதல்வ!

மண்ணுலகச் சுமைதீர்த்து
மனிதகுலத் துயர்நீக்கி
விண்ணுலகத் திருவரசை
மேதினியில் நிலைநிறுத்தும்

புண்ணியத்தின் தனிவடிவே!
புனிதமிகு சான்றோர்தம்
எண்ணமெலாம் ஒளியூட்டும்
இனிய நறுந்திருமலரே!

திருவிழியால் நோக்கிஎமைத்
தோற்றி வழிகாட்டவரும்
தருமமெனும் தவநெறியே!
தண்ணளியின் களஞ்சியமே!

நின்திருப்போர் ஒலிகேட்டு
நிலவுலகம் உயிர் தழைக்கும்.
நன்றுடையோர் அமைதியுறும்
நல்வாழ்வுப் பதம்பெறுவர்.

தங்க மலர்ச்சிரிப்பாலே
தாரணியின் துயர்தவிர்க்க,
எங்கெங்கும் நின் அருளின்
இசைப்பாடல் முழங்குடுக!

—"துறைவன்"


கிறிஸ்மஸ் நன்னாளில்

எங்கள்

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

எங்கள்

உளங்கனிந்த

கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்

ஏ. கே. எஸ்.

ஜுவல்லர்ஸ்

Dial: 519 யாழ்ப்பாணம்

NEW CHEERFUL CHARMING

*Juts What* **SHE** *Wanted*

FOR THE NEW YEAR

RAW COTTON, JAPPAN MANIPURI

**SAREES**

*ONE TO A CUSTOMER*

**TOLARAMS,**

Main Street, ::: Jaffna.

*Tel: 7099.*

**For all your Household requirements**

**Cake Ingredients**

Pure Coffee powder, Fresh Atta Flour
Chilly and Curry Powder, Cleand Curry Stuffs
and
Fresh Butter, Tinned Foods, Milk Foods
Country Row and Samba Rice
Glassware, Enamelware, Stationery Etc.

*Call at :-*

**MASTER STORES**

22, 24, Clock Tower Road,
(Opp. New Building—Jaffna Co-operative Stores)

*Telephone : 7030*

*Available at moderate rates. Free delivery*

**A Happy X' Mas**

**and**

**A Bright and Prosperous New Year**
**to all our Customers and Well Wishes...**

**SAREE EMPORIUM**

124, K. K. S. Road Jaffna

*Phone: 418* ::: *Grams: "Sarees"*

*VISIT*

**VENUS STUDIO**

for attractive Photographs

சிறந்த புகைப்படப்
பிடிப்பாளர்கள்

**வீனஸ் ஸ்ருடியோ**

23, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# நான்காவது வீ

திருடர்களைப் பிடிக்கும் வேலை இருக்கிறதே, இது மிகவும் ஆபத்தான தொழில்.

நுணுக்கமான சிந்தனையும், துணிவான நெஞ்சமும் இல்லாதவர்களுக்கு இந்தத் தொழில் சரிப்பட்டு வராது. ஆனால் நமது தேவகடாட்சம்பிள்ளை இருக்கிறாரே அவருக்கு இத் தொழிலில் வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்தே வந்திருக்கிறது. இல்லாவிட்டால் திருடர்களைப் பிடிப்பதற்கான பொலிஸ் பிரிவின் இன்ஸ்பெக்டராக இவர் வந்திருக்கமுடியுமா என்ன! மேற்படி இலட்சணங்கள் இவரிடம் உண்டோ இல்லையோ!

சின்னஞ்சிறிய இறால் வலை ஒன்றை வைத்துக்கொண்டு கடற்கரைச் சேறோடும் சகதியோடும் போராடி இறால் பிடித்து, அதனால் கிடைத்த வருமானத்தோடு வாழ்வை ஓட்டி வந்த பேதுரு என்ற அந்தக் கிழம் இருந்திருந்தால் இன்று தன் மகனுக்குக் கிடைத்திருக்கும் பேரையும் புகழையும் பார்த்து இறுமாப்படைந்திருக்கும். ஆனால் அந்த ஜீவன் தான் பேழையோடு போய்ச்சேர்ந்துவிட்டதே!

எட்டாவது வகுப்பைமுடித்துக்கொண்டு, மேலே படிக்க விட வசதியற்று, தெருவிலும், திண்ணையிலும் தூங்கித்தூங்கி, கூடாத கூட்டமெல்லாம் கூடிக்கூடி, செய்யத்தகாத அட்டாதுட்டிகளெல்லாம் செய்து செய்து பெற்றுக்கொண்ட அனுபவங்கள்தான் இன்று தேவகடாட்சத்தை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறதென்று பேசிக்கொண்டவர்கள் பலர். இதில் உண்மைகள் உண்டோ இல்லையோ, இந்த ஊருக்குமாற்றலாகிவந்த இந்த இரண்டு வருடகாலத்துள் திருடர்களென்று இவர் கையில் அகப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் இவரின் பால்ய நண்பர்களாகவே இருந்தனர்.

சமீபத்தில் இவருக்கு வேறு இடத்திற்கு மாற்றக் கட்டளை வந்திருந்தது. ஊரில் பெரும் மனிதர்கள் என்று கணிக்கப்பட்ட பலர் இவரின் சேவையை விரும்பி இலாகா அதிபரிடம் விண்ணப்பித்துக் கொண்டதால் இவர் நீடித்து இங்கேயே இருக்க அனுமதிகிடைத்திருக்கிறது.

வயதோ ஐம்பதுக்குக்கிட்டவாக வந்துவிட்டது. இன்னும் சில ஆண்டுகள் சேவைசெய்துவிட்டு "அப்பாடா" என்று பென்சன் வாங்கிக் கொள்ளலாம் என்றுதான் அவர் எப்போதும் நினைப்பார். ஆனால் அப்போதைக்கப்போது அகப்படும் கேசுகளும், அவைகளால் கிடைக்கும் பேர்புகழும் 'பென்சன் வாங்குவது' என்ற எண்ணத்தையே மறக்கவைத்துவிட்டமையால் அவர் உடலிலும் உள்ளத்திலும் வாலிப மிடுக்கு!

மனைவி ஊர்த்தி சமீபத்திலும் இரட்டைக் குழந்தைகளை ஈன்றிருந்தாள்.

திருடர்களையும், கொலைகாரர்களையும் மோப்பம்பிடித்துத் தொடர்வதற்காக வேட்டை நாய்களை வைத்து காரியங்களைச் சாதிப்பது சமீபத்தில்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது. மோப்பம் பிடித்துக் காட்டிக்கொடுக்கப்படும் குற்றவாளி தண்டனை பெறத்தவறிவிடுவதும் இன்று சர்வசாதாரணம். ஆனால் தேவகடாட்சம்பிள்ளையின் அனுபவத்தில் அவரால் 'மோப்பம்' பிடிக்கப்பட்டு அகப்பட்டுக் கொண்டவர்கள் பலர். அவர்களில் தண்டனைக்குத் தவறியவர்கள் ஓரிருவர்தான்.

சின்ன வயதிலிருந்து துப்பறியும் கதைகளைப் படிப்பதில் அவருக்குப் பேரவா! மேல்நாட்டுத் துப்பறியும் முறைகளை இந்நாட்டிற்கேற்ற வழியில் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் திருட்டுகளும், கொலைகளும் அழிந்துவிடும் என்பது இவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நம்பிக்கையை இவர் வெளியே பல சபைகளில் கூறியிருக்கிறார், அதன்படிதான் தனது வேலைமுறைகளையும் வைத்துக்கொள்வார்.

சமீபத்தில் 'மேல்நாட்டுத் துப்பறியும் இலக்கியங்கள் இறக்குமதியாவதைத் தடுக்கவேண்டுமென்ற குரல்கள் பத்திரிகைகள் மூலமாக அடிபட்டபோது "மடப்பயல்கள்" என்று இந்தக்குரல் வைத்தோரைச் சபித்துக்கொண்டார்.

'இந்தத் தொழிலில் இறங்கிக்கொண்டு நீண்டகாலம் வாழ்ந்துவிடமுடியாது' என்ற பயமும் அவரை வெருட்டியதுண்டு. "யாராவது ஒரு முரட்டுப்பயல் இருட்டோடு இருட்டாக ஒருநாள் ... ...?

**— கே. டானியல் —**

போனால் போகட்டுமே, இந்த மயிர் உயிர்!"

எதிரும் புதிருமாக மனதுக்குள் கட்சி கட்டிக்கொண்டு நினைவால் இப்படியெல்லாம் பேசிப்பார்ப்பார்.

* * *

விடிந்ததும் விடியாததுமாக ஊர்த்தி அவரைத்தட்டி எழுப்பினாள்.

இந்த நேரத்தில் இப்படித் தூக்கத்தைக் கலைத்த மனைவிமேல் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "என்னடி!" என்று மனைவிமேல் பாய்ந்து விழுந்த அவரை ஊர்த்தி ஆசுவாசப்படுத்த நினைக்கவில்லை. "அருணாசலம்பிள்ளை வீட்டிலிருந்து போன்" என்று மட்டும் கூறினாள்.

அருணாசலம்பிள்ளை என்றதும், ஏன் தான் இந்த மனிதர் இப்படி அவலைப்படுகிறாரோ?

போனைக் கையிலெடுத்த அவருக்கு அருணாசலம்பிள்ளையின் திருட்டுச் செய்திதான் காத்திருந்தது. ரூபா பத்தாயிரம் ரொக்கம் திருடப்பட்டுவிட்டது.

சுமார் பத்து நிமிடவேளைக்குள் தேவகடாட்சம் புறப்பட்டுவிட்டார். அவரின் 'ஜீப்' இறுமிககொண்டு ஓடுகிறது.

அருணாசலம்பிள்ளையென்
மட்டும்தானா இப்படி 'ஜீ
பறக்கமுடிகிறது?

பொலீஸ்நிலையத்தில் முறை
படி பதிவு செய்து, செய்
தந்தவரை விசாரணை செய்
அதன்மேல் தான் முறையா
நடவடிக்கை எடுக்கப்படுவ
சம்பிரதாயம், ஆனால் வெறு
போனோடு இந்த மனித
அழைத்துவிட்டாரே அரு
சலம்பிள்ளை.

ஊரில் எத்தனையோ பெ
மனிதர்கள் இருக்கின்றன
இவர்களுக்குள் தரம்பிரித்
பத்துப்பேர் இருப்பார்க
அவர்களுக்குள்ளும் தரம்பி
தால் ஐந்து பேர் தேற
இந்த ஐந்துக்குள் அடங்குப
னில் அருணாசலம்பிள்ளை
வரிசையினராக இருப்பார்.

"பட்டணத்தில் இருப
களில் இரு வட்டிக்கடை
என்று மட்டும் சொல்லி
டால்போதும், இதற்குள் ச
தும் அடக்கம். "குடும்பம்
டும் அவ்வளவு ஒத்துப்போ
வில்லை. மற்றும்படிக்கு ச
ஐஸ்வரியங்களும் கடவு
கொடுத்திருக்கிறார்" எ
பரவலாகப் பலர் பே
கொண்டாலும், அவ
பார்த்துமட்டும் கணிப்பதா
அப்படிச் சொல்லிவிட
முடியாது. குடும்ப விவகா
களில் பாவம் அது ஒரு
பாவி! ஐஸ்வரியமெ
ஊரார் சொல்வதெல்
மனைவி அழகம்மாவால்
நடந்தானே.

இந்தளவு பணம் படைத்
ராக இருந்தும் அவரின்
மட்டும் இப்படி பழைய
த்தில் இருப்பது ஆச்ச
தான் தேவகடாட்சம்
[illegible] முன் வி
[illegible] வந்திரு
இ[illegible] தான் முதல்முறை
வீ[illegible] சகலபகுதிக
பார்க்கிறார்.

பட்டணத்தில் நான்கு
பங்களாக்கள் இருந்தும்
பிறந்த வீடான இந்த வீ
ல் வேறெங்கும்
அழகம்மாள் சம்மா
த[illegible] வைத்துக்கொ
'அருணாசலம்பிள்ளை அழ
னில் அடக்கம்' என்று
யாரும் நினைத்துவிடமா
கள்.

கூடத்து அறையின்,
மர அலமாரியின்
யிலிருந்து பணம் போய
றது.

லாச்சிப் பூட்டு உடை
படவில்லை.

கூடத்து அறையின்
உடைக்கப்படவில்லை.

எங்கேனும் ஓடுகள்
கப்பட்டுத் திருடன்
இறங்கியதாகவுமில்லை.

நாய்கள் இரண்டு க
கிருந்திருக்கின்றன.

சமையல்காரன் பண்ட
டோடு இருக்கிறான்.

அருணாசலம்பிள்ளையு
கம்மாளும், மகன் ச
னும், நாலுவீட்டுக்கப்பா
வீடொன்றில் நடந்த
வைபவத்துக்குப்
விட்டு நான்கு மணிக்
திருக்கிறார்கள்.

வீட்டுக்குவந்ததும்
போட்டுவிட்டு அழ
கிணற்றுப்பக்கம் போனா
யாரோ திருடர்கள்
அறையின் கதவால்
றிச் சென்றதைக்
அழகம்மாள் மட்டும் ச

குசினி மாடத்தில்
பட்டிருந்த திறப்புக்
இருந்த இடத்திலேயே
இருக்கிறது.

தேவகடாட்சம் மிகக்
மாக சகலத்தையும்
செய்துகொண்டார்.



**செல்லம்ஸ்**

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ

போன்: 436 யாழ்ப்பாணம்.

# வீடு

இறுமிக்கொண்டு ஓடுகிறது.

அருணாசலம்பிள்ளையென்றால் மட்டும்தானா இப்படி 'ஜீப்' பறக்கமுடிகிறது?

பொலிஸ்நிலயத்தில் முறைப்படி பதிவு செய்து, செய்தி தந்தவரை விசாரணை செய்து அதன்மேல், தான் முறையான நடவடிக்கை எடுக்கப்படுவது சம்பிரதாயம், ஆனால் வெறும் போனோடு இந்த மனிதரை அழைத்துவிட்டாரே அருணாசலம்பிள்ளை.

நகரில் எத்தனையோ பெரிய மனிதர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குள் தரம்பிரித்துப் பத்துப்பேர் இருப்பார்கள்.

## ...வியல் —

அவர்களுக்குள்ளும் தரம்பிரித்தால் ஐந்து பேர் தேறும். இந்த ஐந்துக்குள் அடங்குபவர்களில் அருணாசலம்பிள்ளை முன்வரிசையினராக இருப்பார்.

"பட்டணத்தில் இருபகுதிகளில் இரு வட்டிக்கடைகள்" என்று மட்டும் சொல்லிவிட்டால்போதும், இதனுள் சகலதும் அடக்கம். "குடும்பம் மட்டும் இவ்வளவு ஒத்துப்போகவில்லை. மற்றும்படிக்கு சகல ஐஸ்வரியங்களும் கடவுள் கொடுத்திருக்கிறார்" என்று பரவலாகப் பலர் பேசிக்கொண்டாலும், அவரைப் பார்த்துமட்டும் கணிப்பதானால் அப்படிச் சொல்லிவிடவே முடியாது. குடும்ப விவகாரங்களில் பாவம் அது ஒரு அப்பாவி! ஐஸ்வரியமென்று ஊரார் சொல்வதெல்லாம் மனைவி அழகம்மாவால் சேர்ந்ததுதானே.

இத்தனை பணம் படைத்தோராக இருந்தும் அவரின் வீடு மட்டும் இப்படி பழைய போக்கில் இருப்பது ஆச்சரியந்தான். தேவகடாட்சம் இந்த வீட்டின் முன் விருந்தாளியாகத்தான் வந்திருக்கிறார். இதுதான் முதன்முறையாக வீட்டின் சகலபகுதிகளையும் பார்க்கிறார்.

பட்டணத்தில் நான்கு புதிய பங்களாக்கள் இருந்தும் தனது பிறந்த வீடான இந்த வீட்டை விட்டு வேறெங்கும் போக அழகம்மாள் சம்மதிக்காமல் இதை வைத்துக்கொண்டு "அருணாசலம்பிள்ளை அழகம்மாளின் அடக்கம்" என்றுமட்டும் யாரும் நினைத்துவிடமாட்டார்கள்.

கூடத்து அறையின், வேப்பமர அலுமாரியின் நடுவில் இருந்து பணம் போயிருக்கிறது.

லாச்சிப் பூட்டு உடைக்கப்படவில்லை.

கூடத்து அறையின் பூட்டும் உடைக்கப்படவில்லை.

எங்கேனும் ஓடுகள் பிரிக்கப்படுத்த திருடன் உள்ளே இறங்கியதாகவுமில்லை.

நாய்கள் இரண்டு காவலுக்கிருந்திருக்கின்றன.

சமையல்காரன் பண்டா வீட்டோடு இருக்கிறான்.

அருணாசலம்பிள்ளையும், அழகம்மாளும், மகள் சரோஜாவும், நாலுவீட்டுக்கப்பாலுள்ள வீடொன்றில் நடந்த ஒரு வைபவத்துக்குப் போய்விட்டு நான்கு மணிக்கு வந்திருக்கிறார்கள்.

வீட்டுக்குவந்ததும் கீழ்வீட்டு அறைப்பக்கம் வந்து அழகம்மாள் வீட்டுப்பக்கம் போனபோது யாரோ திருடர்கள் கூடத்து அறையின் கதவால் வெளியே ஓடியதாக, அழகம்மாள் மட்டும் சாட்சி!

அலுமாரி மாடத்தில் வைக்கப்பட்டிருந்த திறப்புக் கோர்வை இருந்த இடத்திலேயே இருக்கிறது.

தேவகடாட்சம் மிகக் கவனமாக சகலதையும் பதிவு செய்துகொண்டார்.

அன்றுடத் தேவக்காக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அந்தப் பணம் லாச்சியில் வைக்கப்பட்டிருந்தது, அது மட்டுமல்ல அத்துடன் இன்னும் ஐயாயிரமும்கூட இருந்து நான்கைந்து தடவையாக அந்த ஐயாயிரமும் எடுக்கப் பட்டிருக்கிறது. அழகம்மாள் மட்டும் தன் கைபடவே இப்பணத்தை எடுத்துச் செலவுசெய்திருக்கிறாள்.

வீட்டிற்கு அடிக்கடி வந்து போபவர்களைப்பற்றித் தேவகடாட்சம் விசாரணைசெய்தார்.

நல்லான் என்னொருத்தன்.

இருபதாண்டு காலமாக வீட்டின் பின்புறத் தென்னந் தோப்பில் கள்ளுச் சேர்த்து வருகிறான்.

வீட்டின் சகல செளிவு சுழிவுகளையும் அவன் அறிந்தவனாக இருந்தான் என்பது தகவல்.

அவனைப்பற்றி அதிகமாக விசாரிக்க முடியவில்லை.

நல்லானைபற்றி அம்மாள் நல்லுகத்தன் சொல்கிறாள்.

கணபதிப்பிள்ளை என்ற இன்னொருவன்.

இவன் அடுத்த வீட்டைச் சேர்ந்தவன். பக்கத்துக்கூட்டுறவுக் கடையில் வேலைபார்க்கிறான்.

கட்டுப்பாட்டு விலைக்குப் பொருள் பண்டங்களை வாங்குவதற்கு அம்மாவின் கையாளாக உதவுபவன். இதனால் இவனும் வீட்டில் சந்தேகமின்றி எப்போதும் பழகுகிறான். அப்போதைக்கப்போது சில்லறையாக 'கடன்' என்ற பேரில் அம்மாவிடம் அவன் பெற்றுக்கொள்கிறான்.

அருணாசலம்பிள்ளை அவனின் யோக்கியத்திற்குச் சிபார்சு செய்தார். அதனால் தேவகடாட்சத்தால் அவனையும் ஆராய முடியவில்லை.

சேர்ந்து வெளுப்போன், மயிர் வெட்டுவோன, காய் பிஞ்சுக்காரன், புல்லுக்காரி என்ற வரிசையில் வந்தோர் விசாரணைக்கு அவசியமற்றவர்கள் கிவிடவே கடையில் மிஞ்சியவன் சமையல்காரப் பண்டா ஒருவன் தான்.

தேவகடாட்சத்தின் முன் பண்டா துவண்டுபோய் நின்றான்.

தேவகடாட்சத்தின் வழமையான மிரட்டல் வீட்டு முகட்டை அதிரவைத்தது.

அதற்கப்புறம்...

அவனின் கன்னங்கள் சிவந்து பொருமிப் போயின. அடிவயிற்றைப் பொத்திக்கொண்டு அவன் அழுதான்—கதறினான்.

பண்டா திருடியிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அவன் வேறு யாருக்காவது உளவாளியாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் தேவகடாட்சமும் வந்துவிட்டார்.

திருடர்கள்யாரும் எந்தத் துப்பையும் விட்டுச் செல்லவில்லையே!

ரேகை அடையாளப்பதிவு செய்வதற்காக லாச்சியை யாரும் தீண்டக்கூடாதெனக் கூறிவிட்டு பண்டாவையும் இழுத்துக்கொண்டு தேவகடாட்சம் நிலையத்துக்கு வந்துவிட்டார்.

சற்று வேளைக்குப்பின் பண்டாவின் பரிதாபமான கூச்சல் கேட்டது.

அவனிடமிருந்து உண்மையை வருவிப்பதற்காக அவனை என்னவேண்டுமானாலும் செய்யலாம்!

அவன் வெறுமனே கத்தினான்!

பத்து வருடங்கள் விசுவாசமாக உழைத்தானோ இல்லையோ இப்போது அவன் கதறவேண்டித்தான் இருந்தது.

★

நாட்கள் பதினைந்து ஓடிமறைந்துவிட்டன.

தேவகடாட்சத்தின் அனுபவத்தில் இப்படி நான் இழுத்துக்கொண்ட கேஸ்கள் ஒன்றே

இரண்டோ தான். யாராவது ஒருவனை வைத்துக்கொண்டு, எப்படியாவது உண்மையைக் கறந்துவிடும் அவரைப் பண்டா நன்றாக ஏமாற்றிவிட்டான். "பயல் இத்தனை வாங்கியும் வாயைத் திறக்க மாட்டேன் என்றுவிட்டானே!"

அருணாசலம்பிள்ளை இரு தட்வை வீட்டுக்கும் வந்து போய்விட்டரே! இது தேவகடாட்சத்துக்குச் சவால்விட்டது போலத்தான்.

ரேகை அடையாளப் பதிவுப் பகுதியின் றிப்போட்டை இன்று காலை பார்த்ததில் இருந்த நம்பிக்கையும் ஓடிமறைந்துவிட்டது.

பண்டாவின் ரேகைப்பதிவோடு அந்தச் சுவட்டுப்பதிவுகள் கொஞ்சமேனும் சரிப்பட்டு வரவில்லை. இதற்குமேல் பண்டாவை வைத்துக்கொண்டு என்னதான் பண்ண முடியும்!

மேலும் சந்தேகத்துக்குரியவர்கள் நல்லானும், கணபதிப்பிள்ளையுந்தான் அவர்களை இழுத்துவந்து ரேகைப்பதிவு செய்துகொள்வது இப்போது செளகரியமா? நல்லானைப் பற்றி அம்மாள் சிபார்சு. கணபதிப்பிள்ளையைப் பற்றிய நற்சாட்சியை அருணாசலம் தந்துவிட்டார்.

இவர்கள் இருவரையும் தவிர்த்துவிட்டால்... தவிர்த்துவிட்டால்......?

மூன்றுவதான பேர்வழியைப் பற்றி நினைக்கத்தான் முடிந்ததே தவிர, அவளைப்பற்றி...

பெரிய இடத்துவிவகாரத்தில் வீணாகத் தலையைச் செருகிக்கொண்டு அவஸ்தைப்படவேண்டுமா?

சேற்றுப் பிற்பகல் வயது வந்தவர்களுக்கு மட்டும் காட்டப்பட்ட ஆங்கிலப்படம் ஒன்றை பார்ப்பதற்காக அவர் சினிமாக் கொட்டகைக்குப் போயிருந்தார்.

இடைவேளை

இவருக்குச் சமீபத்தே ஒருவன் இருந்தான்.

அவனுக்கும் அப்பால் அருணாசலம் பிள்ளையின் மகள்.

'இவனுக்கும் இவளுக்கும் எப்படித் தொடர்பு?'

அவனை முன்னமே அவர் தெரிந்துவைத்துக் கொண்டிருந்தார்.

பல தடவைகள் அவன் பொலிஸ்நிலயத்திற்கு வந்து போயிருக்கிறான்.

நாகரிகமான திருடனாக;

ஸ்திரீ லோலனாக.

தேவகடாட்சத்தின் கரங்கள் அவன் உடம்பில் ஒப்புகண்டதுண்டு.

இடைவேளை முடிந்தது.

தேவகடாட்சத்தின் கவனமெல்லாம் இருவரையும் நோக்கியதாகவே இருந்தது.

வயது ஐம்பதைக்கட்டி விட்டதுதான்!

ஆனாலும் இக்காட்சிகளைப் பார்த்துவிடத்தானே மனது விரும்புகிறது!

இருட்டோடு இருட்டாக...

ஓடிக்கொண்டிருக்கும் படமோ வயதுவந்தவர்களுக்கு மட்டுமானது.

அமெரிக்காவிலே தயாரிக்கப்பட்டது.

நீச்சல் தடாகத்திலிருந்து அப்படியே ஒருத்தியும் ஒருவனும் வருகின்றனர்

அவள் மேனியின் மதாளிப்பிலே அவன் தன் முகத்தை...

எல்லோரும் வாயைப் பிளந்து விட்டார்களா?

கேட்பவை எல்லாம் பெருமூச்சுக்களா?

'சடக், சடக்' கென்று யாரோ நெட்டி முறித்துக்கொள்கிறார்கள்.

அந்தச் சீவன் நீட்டிநெட்டுயிர்த்துச் செல்கிறதா? விரக்தியின் வேதனையா?

ஊவேளை.

அதற்குள் கொட்டகை கலகலத்துப் போகிறது.

தேவகடாட்சம் இப்போதுதான் திரையில் கவனத்தைத் திருப்புகிறார்.

'வயதுவந்தவர்களுக்கு மட்டும்' என்ற இந்தக் காட்சியில்—

ஆறுவயதுக் குழந்தை ஒருவன்.

பின்னிக்கொண்டு கிடக்கும் அந்தக் காட்சியைக்கண்டு—

வாயை அகலத் திறந்த,

கைகளை தட்டிக் கலகலத்து,

எல்லோரையும் சிரிக்க வைத்து விட்டானே!

அவன் அந்தக் கதாநாயகியின் மகன்!

வெறும் மகனல்ல, நான்காவது குழந்தை. அவனின் தந்தை இவளுக்கு நான்காவது கணவன்.

இப்போது நீச்சல் தடாகத்தின் அருகே அவள் காதலனாக ஏற்றவன் அவளுக்கு ஐந்தாவது கணவன்.

நான்கு கணவர்களையும் அறுத்தடுத்து அவள் விவாகவிலக்குச் செய்துகொண்டதாகக் கதை!

அந்தச் சின்னப்ப பயலின் வேடிக்கையிலேதான் இப்போது தேவகடாட்சம் லயித்திருக்கிறார்.

சற்று வேளைக்குப் பின்... அருணாசலத்தின் மகளையும் அந்த றவுடியையும் நோக்கி கண்களை வீசினார்.

அங்கே அவர் கண்டது—! வெறும் நாற்காலிகள்!

அவர் கண்களை அகல அகல வீசினார். அங்குமிங்குமாகப் பரவிக்கிடந்த சின்னஞ் சிறுசுகளுக்குள் இந்தச் சின்னஞ் சிறிசுகளை அவரால்காண முடியவில்லை.

அவர்கள் இடையில் வெளியேறியிருக்கவேண்டும்.

அவர்களைப் பின்தொடர அவர் நினைத்தார்.

ஏன்?

அவனைத் திருடனென்று நினைத்தா?

அவளும் அவனும் எங்கே போகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை அறியத் துடித்தா?

எதற்காகவேனும் அவர்களைப் பின்தொடர்வது நாகரிகமல்லவே! அதுவும் பெரிய இடத்து விவகாரங்களில் வீணாக மாட்டிக்கொண்டு ஏன் அவஸ்தைப படவேண்டுமாம்!

இப்போது தேவகடாட்சத்தின் எண்ணமெல்லாம் அந்த றவுடியின் ரகசிய நோக்கத்தைத் திருப்பியிருக்கிறது.

சிலமணி நேரங்களுக்குமுன் கண்ட அத்தனை காட்சிகளையும் அவர் மறுபடியும் மனத்திரையில் வரவழைத்துக்கொள்கிறார்.

ஜோடியாக...

பணம் நிச்சயமாக அவனிடந்தான சேர்ந்துவிட்டதாகவே அவர் முடிவுக்கு வந்துவிட்டார்.

அவன் திருடியிருப்பான்,

அல்லது அவனுக்காக அவளே எடுத்துக்கொடுத்திருப்பாள்.

இந்த இரண்டில் எது நடந்தாலென்ன அவருக்குப் பயனு கிடைக்கப் போகிறது?

பெரிய இடத்து விவகாரம்!

அவனைத் திருடனுக்கில் அவளைத் தொடர்புபடுத்தித்தான் ஆகவேண்டும்.

அப்படியானால் ...

அப்படியானால் அருணாசலம் பிள்ளை ...

ஐயோ, இதை நினைக்கவே அவரால் முடியவில்லையே!

தேவகடாட்சம் பின்னைக்குத் தள்ளத் திணறுகிறது.

* * *

விடிந்ததும் விடியாததுமாக அருணாசலம்பிள்ளையின் கார் பறந்தோடி வந்து தேவகடாட்சத்தின் வீட்டில் நின்றது

அருணாசலம்பிள்ளை திருடனைக் கண்டுபிடித்து விட்டது போன்ற தகவல்தான் கொடுத்தார்.

பக்கத்துவீட்டுக்காரக் கணபதிப்பிள்ளையை அவர் மனைவியான அழகம்மாள் சந்தேகப்படுகிறாள்

(8-ம் பக்கம் பார்க்க)

Phone : 518 Telegram : YAPPAN

For Jewellery

REMEMBER

'YAPPAN'

The Oldest & Native Firm of its kind IN THE NORTH.

K. ARUMUGAMPILLAI & SONS

JELLERY

JAFFNA.

தரத்திலும் நம்பிக்கையிலும்

சிறந்து விளங்கும்

பேஷன் கவுஸ்

ஸ்தாபனத்தாரின் உள்ளங்கனிந்த நத்தார் வாழ்த்துக்களை உங்களுக்கு அளிக்கிறோம்.

பெஷன் கவுஸ்

65, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

டெலிபோன்: 7046

புதிய டிசைன்களில்

உத்தரவாதமுள்ள நகைகளை

தெரிவு செய்வதற்கு

சிறந்த ஸ்தாபனம்

K. T. M.

ஜுவல்லர்ஸ்

67, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்

உயர்ந்த ரகம்! நிதான விலை!

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

LEADING HOUSE for FASHIONABLE SAREES of ALL VARIETIES

Kanesan Stores

78, K. K. S. Road, Jaffna.

Telephone: 7169 Telegram: KANESAN TEX

Greet Your Friends This X'MAS With

PREMIER X'MAS CAKES

Novelty Cakes - Yole Logs & Brudhers

Stocks Available at

Premier Cafe

31, Main St.,

M/s Jaffna Co-operative Stores Ltd.,

Main & Dept Stores, Hospital Road.,

PREMIER BAKERY

Leading Bakers & Confectioners.

T'Phone 644 73, Main St., JAFFNA

# உலகமேடை

டி. எம். எம்

## டாக்டர் ஜகன்

ராஜிநாமா செய்ய மறுத்த டாக்டர் செட்டி ஜகன் சென்ற வாரம் பிரிட்டிஷ் கயானா பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

பிரிட்டிஷ் கயானா தென் அமெரிக்காவின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு நாடு. இந்தியர்களும், நீக்ரோக்களும் அங்கு பிரதான சமூகத்தினர். டாக்டர் செட்டி ஜகன் பலவருடங்கள் அந்நாட்டுக்குப் பிரதம மந்திரியாக இருந்தார். அவரது கட்சிக்கு நாட்டிலே இன்னும் செல்வாக்கு அதிகம்.

டாக்டர் ஜகனின் முன்னோர்கள் இந்திய வம்சாவளியினர். அவரது தந்தை கயானா கரும்புத் தோட்டத்தில் ஒரு தொழிலாளியாக இருந்தவர். பிரதமர் ஜகன் அமெரிக்காவில் படித்து அமெரிக்கப் பெண் ஒருத்தியை மணந்தவர். இடதுசாரியான அவரையும், அவரது மனைவியையும் கம்யூனிஸ்டுகள் என அமெரிக்காவும் பிரிட்டனும் மதித்து வருகின்றன.

கயானாவில் கடந்த சிலகாலமாகவே இந்தியர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு வந்தன. இதன் காரணமாக அந்நாட்டின் சுதந்திரம் தாமதிக்கப் பட்டு வந்தது.

கயானாவின் பிரச்னையைத் தீர்க்க இனவாரிப் பிரதிநிதித்வ அடிப்படையில் தேர்தல் நடத்தும் வகையில், காலஞ்சென்ற பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் அரசியலமைப்பை வகுத்தது. இந்த அரசியலமைப் பின்படி நடைபெற்ற சமீபத்திய தேர்தலில் ஜகனின் கட்சிக்கு தெளிவான மெஜாரிட்டி பலம் கிடைக்கவில்லை.

கயானா தேர்தலில் அமெரிக்காவுக்குச் சிரத்தை உண்டென ஜகன் கருதுகிறார். தன்னைக் கவிழ்க்க பிரிட்டனுடன் சேர்ந்து சதி செய்திருப்பதாய் அமெரிக்கா மீது அவர் சந்தேகம் கொண்டிருக்கிறார். ஜகன் ஒரு கம்யூனிஸ்ட் எனக் கருதப்படுவதால், அவரது தலைமையிலுள்ள கயானாவுக்கு பிரிட்டன் சுதந்திரம் அளிக்குமானால், அது கியூபா பிரதமர் காஸ்ட்ரோவின் கையை பலப்படுத்தும் என அமெரிக்கா அஞ்சுகிறது. "சுதந்திர உலகில்" அமெரிக்காவின் ஒரே எதிரி காஸ்ட்ரோவின் கியூபாதான். எனவே தனது எதிரிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க அமெரிக்கா விரும்பவில்லை.

இப்போது பிரதமராகியிருக்கும் டாக்டர் பேர்ன்ஹாம் ஒரு வழக்கறிஞர். அவரது கட்சி பொதுவாக நீக்ரோக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறது. இந்தியர் - நீக்ரோ மோதலுக்குப்பின் பதவிக்கு வந்திருக்கும் புதிய பிரதமர், நாட்டின் இன ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவதில் எவ்வளவு தூரம் வெற்றிபெறப் போகிறார் என்பதைக் கவனிக்கும் அதே சமயம், நாட்டின் பெரும்பான்மையினரான இந்தியர்கள் மீது பாரபட்சம் எதுவும் காட்டப்படுமோ என்றும் சில வட்டாரங்கள் அஞ்சுகின்றன.

தோல்வியுற்ற பிரதமர் இப்போது கயானாவை "பாகிஸ்தான்" பண்ணு என்கிறார். அதாவது இந்தியர்களுக்கு தனிநாடு கேட்கிறார். இந்த தகராறுகள் பிரிட்டிஷ் கயானாவின் அரசியல் பொருளாதாரஸ்திரத்தை வெகுவாகப் பாதிப்பது மட்டுமின்றி, அந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கும் காலத்தையும் நீண்ட தூரம் தள்ளிவைக்கக்கூடும்.

---

பைந்தமிழ்ப் பூங்கா-5

## உயர்ந்த நன்னெறியில் நடந்து இன்புற்றுவாழ்வதே மக்கள் கடமை

— செல்வி சு. பூரணம் —

பத்துப்பாட்டு நூல்களில் மிகப்பெரியது மதுரைக்காஞ்சியாகும். எழுநூற்றி எண்பத்திரண்டு அடிகளைக் கொண்ட இந்நூல் மாங்குடிமருதனாரால் இயற்றப்பட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இந்நூலின் பாட்டுடைத்தலைவனாக விளங்குகிறான்.

நிலையாமையை உணர்த்தி உயிருள்ளபோது உயர்ந்த நன்னெறியில் நடந்து இன்புற்று வாழ்வதே மக்கள் கடமை என்று எடுத்துக்காட்டுவதே இந்நூலின் குறிக்கோளாகும். மாங்குடி மருதனார் நெடுஞ்செழியனை நோக்கி, அரசனே கடல் சூழ்ந்த வையகத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் அனைவரும் கொண்டுவந்து குவிக்கும் மணலைக் காட்டிலும் பலர் உலகமேடையிலே வீரர்களாக வாழ்ந்து மறைந்துள்ளனர், என்று கூறுகிறார்.

பாண்டியநாட்டின் இயற்கை வளத்தைப் புலவர் அழகாகப் பாராட்டுகிறார். மதுரைமாநகரத்தின் மாண்புகள் விளக்கமாகக் கூறப்படுகின்றன; காஞ்சி என்பதன் பொருள் நிலையாமை. நிலையாமையைப் பற்றிக் கூறும் கவிஞர் நெடுஞ்செழியன் காதல் மகளிருடன் கலந்து உண்டு மகிழ்ந்துவாழ வேண்டுமென ஆசைப்படுகிறார். முத்து, சங்குவளையல்கள், பலவகையான தானியங்கள், புளி, உப்பு, காய்ந்த மீன்கள் ஆகியன கப்பல் மூலம் பாண்டி நாட்டிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டன. அந்நிய நாட்டுக் குதிரைகள் பாண்டிநாட்டில் இறக்குமதி செய்யப்பட்டன. வைகைநதி வற்றாதநீர்ப்பெருக்குடன் காட்சியளித்தது. பண்டைக் காலத்தில்கொடிகளையே விளம்பரக் கருவியாகக்கொண்டிருந்தனர். விழாக்கொடி, வெற்றிக்கொடி, வியாபார விளம்பரக்கொடி, மதுபானம் கிடைக்கும் இடத்தை அறிவிக்கும் கொடி, இன்னோரன்ன பலவகையான கொடிகள் மதுரைமாநகரிலே பறந்துபட்டுக் கிடந்தன. இக்காலத்திலும் சிவன்கோவில் சிறந்து விளங்கியுள்ளது. பள்ளிகள் எனப்படும் பௌத்தர் சமணப் பள்ளிகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமைந்திருந்தன என்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. உண்மையைக் கண்டறிந்து தீர்ப்புக் கூறும் உயர்ந்த நீதிமன்றம் மதுரையில் இருந்தது. நீதிபதிகளைப் பற்றி ஆசிரியர் கூறிச்செல்லும் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியதாக அமைந்துள்ளது. நீதிபதிகள் பயத்தையும் துன்பத்தையும் விட்டவர்கள். நடுநிலை பிறழாதவர்கள் ஒழுக்கமுடையவர்கள். நீதி கூறும் தன்மையை மேற்கொண்டவர்கள். வணிகர் அறவழி பிழையாத ஆறறிவழி ஒழுகினர். பலவகைத் தொழிலாளர்கள் மதுரைமாநகரிலே வாழ்க்கை நடத்தினார்கள். சங்குவளையல் செய்பவர் ரத்தினங்களிலே துளையிட்டு மாலையாகக் கோர்த்துக் கொடுப்பவர், பொற்கொல்லர், அறுவை வாணிகர், செம்பு வியாபாரிகள், வாசனைப் பொருள் வணிகர்கள், பார்த்தது பார்த்தபடியே தீட்டக்கூடிய ஓவியர்கள் போன்றோர் இருந்ததாகக் குறிக்கப்படுகின்றனர். அன்னசாலைகள் அதிகம் இருந்தன யானைகளை மறைக்கக்கூடிய அளவிற்கு செந்நெல் வளர்ந்த நிலம் குறிக்கப்படுகிறது. மலையான நாட்டிலே கொண்டாடும் ஓணம் பண்டிகை அன்று மதுரையில் கொண்டாடப்பட்டது. நாளங்காடி அல்லங்காடிக் கடைகள் மதுரையில் இருந்தன.

நிலையாமையை விளக்கி உயர்ந்த நன்னெறியில் வாழ அழைத்துச் செல்லும் மதுரைக்காஞ்சி மதுரையின் அழகையும் பெருமையையும் மதுரமாக கூறிச் செல்கிறது.

வாடைக்காற்றின் கொடுமையும் இனிமையும்:-

தலைவிக்கு கொடியதாகவும் தலைவனுக்கு நல்லதாகவும் அமைந்த வாடைக்காலம் நெடுநல்வாடைக்குச் சிறப்பாக அணிசெய்கிறது. இப்பாட்டின் தலைவனும் மதுரைக் காஞ்சியின் தலைவனுமே நெடுஞ்செழியனாகும். மனைவியைப் பிரிந்து தனித்திருக்கும் காதலிக்கு வாடைமிகக் குளிர்காலம் முடிவற்றதாகத் தோன்றுகிறது ஆனால் காதலியைப் பிரிந்து போர்க்களத்திலே கடமையாற்றும் காதலனுக்கு நள்ளிரவிலும் அவ்வாடைக்காற்று நல்லவாடையாய் சுறுசுறுப்பைத் தருகின்றது.

நூலின் எவ்விடத்திலும் அரசனுடைய பெயர் சூட்டப்படவில்லை. "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என்ற தொடரே பாண்டிய மன்னன் என்பதைக் குறிக்கிறது.

மழை விடாமல் பெய்து பின் ஓய்கின்றது. வாடைக்காற்று கொடுமை செய்கின்றது. இடையர்கள் தங்கள் ஆடு மாடுகளை மேட்டு நிலத்தை நோக்கி ஓட்டிச் செல்கின்றனர். மரம்செடி கொடிகள் மலர்ந்து மணம்பரப்புகின்றன. மங்கையர்கள் பிச்சிப்பூ மலர்வதைக் கண்டு அந்திநேரம் வந்துவிட்டதென அறிந்து மனை விளக்கேற்றுகின்றனர். அந்தப்புரத்திலே அரசி கட்டிலிலே வருந்திக்கிடக்கிறாள். வேந்தன் போரைமுடித்து வெற்றியுடன் விரைவில் திரும்ப வேண்டுமென ஏவல் பணிப்பெண்கள் தெய்வத்தை வேண்டுகின்றனர்.

நெடுநல்வாடை இலக்கியப் பண்டைத் தமிழகத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது. தமிழகத்திலே கட்டிடக்கலை நிபுணர்கள் திட்டம்போட்டுத் தருவதற் கேற்பச் சிறந்த மாளிகைகள் கட்டப்பட்டன. அரசனுடைய அந்தப்புரக்காட்சியை அப்படியே கவிஞர் வருணிக்கிறார். பாண்டியன் நள்ளிரவிலும் பள்ளிகொள்ளாமல் விழுப்புண்பட்டோரை நாடிச் செல்வது தமிழ் மன்னர்களின் பண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. யவனர்களால் செய்யப்பட்டபாவை விளக்குகள் தமிழகத்தை அணிசெய்தன. நெல்லும் மலரும் தூவி கைதொழுது மாலையிலே மணிவிளக்கு ஏற்றுவது மங்கையர் மரபு. கோடைகாலத்தில் குளிர்நீர் குடிக்க 'தொகுவாய்க் கன்னல்' என்ற மண் சாடியைப் பயன்படுத்தினார். செல்வர்கள் வீட்டில் பொன்னும் வெள்ளியும் மிகுதியாகக் காணப்பட்டது. இல்லங்களின் உள் பகுதியில் சிற்பங்களும் சித்திரங்களும் கொள்ளையாகத் தீட்டப்பட்டிருந்தது.

நெடுநல்வாடை பண்டைத் தமிழ் புலவரின் ஆழ்ந்த மதியையும் கூர்ந்த அறிவையும் எடுத்துக் காட்டுவதுடன் தமிழகத்தின் விழுமிய நாகரிகத்தையும் விளக்கிச் செல்கிறது.

---

# அரசியல் கட்சிகளும் அவைகளின்வரலாறும்

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் பல கட்சிகளும் போட்டியிடுகின்றன. அரசியல் கட்சிகளும அவைகளின் வரலாறும் இங்கு தரப்பட்டுள்ளன.

### அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி 19·7-ம் ஆண்டு ஆரம்பமானது. இலங்கை சுதந்திரமடைந்தபின் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் யூ. என். பி. அபேட்சகர்களை எதிர்த்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டு இது அதிகமான ஸ்தானங்களைக் கைப்பற்றியது. மாறுபட்ட அபிப்பிராயம் காரணமாக, திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் போன்றவர்கள் தமிழ்க்காங்கிரஸிலிருந்து விலகியபின் 1952-ம் ஆண்டு தேர்தலிலும் தமிழ்க் காங்கிரஸ் அதிகமான ஸ்தானங்களைப் பெற்றது. 1952-ம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற சமயம் தமிழ்க்காங்கிரஸ் ஆளும் கட்சியான யூ. என். பி. க்கு ஒத்துழைப்பு கொடுத்தது. சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக வந்தபோது, தமிழ்க் காங்கிரஸ் யூ. என். பி. க்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்திக்கொண்டது. 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிட்ட போதிலும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் மட்டுமே வெற்றி பெற்றார். 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலிலும், ஜூலை தேர்தலிலும், தமிழ்க் காங்கிரஸ்சார்பில் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்ட திரு எம். சிவசிதம்பரம் மட்டுமே வெற்றிபெற்றார் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்க்காங்கிரஸ் போட்டியிடுகிறது இலங்கை முழுவதும் சிங்களவர்களும் தமிழர்களும் சமஉரிமையுடன் வாழவேண்டும் என்பதே தமிழ்க் காங்கிரஸின் கொள்கை

### தமிழரசுக்கட்சி

தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்தவர்கள் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சியை 1949-ம் ஆண்டு நிறுவினர். தமிழ்க்காங்கிரஸிலிருந்து பிரிந்துவந்த திரு. கு. வன்னியசிங்கமும், டாக்டர் ஈ. எம். வி நாகநாதனும் தமிழரசுக்கட்சியை வளர்ப்பதில் ஈடுபட்டார்கள். 1952-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இக்கட்சி போட்டியிட்ட போதிலும், கோப்பாய், திருக்கோணமலை ஆகிய தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றது தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த போதிலும், 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டு 10 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1960 மார்ச் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 15 தொகுதிகளிலும், 1960 ஜூலை தேர்தலில் 16 தொகுதிகளிலும் வெற்றிபெற்றது. எதிர்வரும் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லாத் தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சி போட்டியிடுகிறது. இலங்கையில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதே இக்கட்சியின் கொள்கையாகும்.

### ஈழம் முன்னணி

முன்னாள் வவுனியா எம். பி. தா. சி. சுந்தரலிங்கத்தை தலைவராகக்கொண்டு 1956-ம் ஆண்டு ஈழம் முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. 1952-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திரு. சுந்தரலிங்கம் வெற்றி பெற்றார். 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்றார். அதன்பின் தனது கட்சியின் கொள்கையை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரப்புவதற்காகவும், அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்காகவும் எல்லாத் தொகுதிகளிலும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தினார். வவுனியா பட்டணசபையில் ஒரே தடவையில் தனது கொள்கையைப் பரப்புவதற்காக மூன்று வட்டாரங்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். மீண்டும் 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் மூன்று தொகுதிகளில் ஈழம்முன்னணி சார்பில் அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டனர். பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா ஆகிய தொகுதிகளில் ஈழம்முன்னணி போட்டியிட்டபோதிலும் எந்த தொகுதியிலும் வெற்றிபெறவில்லை. 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் ஈழம் முன்னணி எத்தொகுதியிலும் அபேட்சகர்களை நிறுத்தவில்லை. எதிர்வரும் தேர்தலில் காங்கேசன் துறை, வவுனியா, உடுவில் ஆகிய தொகுதிகளில் ஈழம் முன்னணி போட்டியிட முடிவு செய்துள்ளது. தமிழ்பேசும் மக்களுக்காக இலங்கையில் 'ஈழத் தமிழ் ராஜ்யம்' ஏற்படுத்துவதே இக்கட்சியின் கொள்கையாகும்

### ஐக்கிய தேசியக்கட்சி

காலஞ்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் 1946-ம் ஆண்டு ஐக்கியதேசியக்கட்சி உருவாகியது. காலஞ்சென்ற பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்க 5 மந்திரிகளும், 25 எம். பி.க்களும் புதிய கட்சியை 46-ம் ஆண்டு உருவாக்கமுன் வந்தார்கள். முதலாவது பொதுத்தேர்தலில் யூ. என் பி. சார்பில் 40 அபேட்சகர்கள் வெற்றிபெற்றார்கள். திரு. டி. எஸ். சேனநாயக்கா காலமான பின் அவரது மகன் டட்லி சேனநாயக்கா கட்சிக்குத் தலைமைதாங்கி பிரதமரானார். 1952 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 56 யூ. என் பி. அபேட்சகர்கள் வெற்றிபெற்றனர். 1953-ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்கா சுகவீனம் காரணமாக ஓய்வு எடுத்தபின், சேர் ஜோன் கொத்தலாவல கட்சிக்கு தலைமைதாங்கி பிரதமரானார்.

1956-ல் நடைபெற்ற தேர்தலில் யூ. என். பி கட்சி 8 தொகுதிகளில்மட்டுமே வெற்றிபெற்றது. இக்கட்சி 56-ம் ஆண்டு 76 தொகுதிகளில் போட்டியிட்டது. 1958-ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்கா மீண்டும் அரசியலில் இறங்கி யூ என். பி. சிக்கு தலைமைதாங்கினார் 1960ம் ஆண்டு மார்ச் தேர்தலில் 127 தொகுதிகளில் போட்டியிட்ட யூ என். பி. 50 இடங்களில் வெற்றிபெற்றது! சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் யூ. என். பி. அரசாங்கம் தோல்வியடைந்ததால் மீண்டும் 1960 ஜூலை தேர்தலில் 128 தொகுதிகளில்போட்டியிட்ட யூ என். பி. 30 இடங்களில் வெற்றி பெற்றது. திரு டட்லி சேனநாயக்கா எதிர்க்கட்சித் தலைவரானார். எதிர்வரும் தேர்த

(12-ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா

## கிறிஸ்மஸ் அதிர்ஷ்டம்!

— பாமா ராஜகோபால் —

மேரியின் கண்களிலே நீர்த்துளிகள் சொட்டுச் சொட்டாக விழ ஆரம்பித்தன

அவள் மனதிலே ஏற்பட்ட ஆசைகள் நிறைவேறமாட்டாதோ என்று எண்ணிய போது அவள் தன்னையறியாமலேயே அழத் தொடங்கிவிட்டாள்.

அழகுக்கு அழகூட்டும் வண்ணமலர்த் தோட்டத்தின் மத்தியில் வாயிலே வைத்திருந்த வாளித்தண்ணீரை கீழே வைத்துவிட்டு சிலையாக நிற்கும் மேரியை யார் தான் கவனிக்கப் போகிறார்கள்!

காலை ஏழுமணிக்குப் பூந்தோட்டத்துக்கு தண்ணீர் வார்க்கத் தொடங்கியவள் மணி ஒன்பதாகியும் தன் வேலையை முற்றாக முடிக்காது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

பத்துவயது நிறையாத அந்தச் சின்னஞ் சிறுமியால் அந்தப் பெரியளவு பூந்தோட்டத்துக்குத் தண்ணீர் வார்ப்பதென்றால் முடிந்தகாரியமா?

அஞ்சி அஞ்சி வேலைசெய்து கொண்டிருக்கும் அந்தப் பிஞ்சு உள்ளத்தின் வேதனையை யார் அறியப் போகிறார்கள்!

"இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகு கிறிஸ்மஸ்! எல்லாப் பிள்ளைகளும் புதுச்சட்டை போட்டு தங்களுடைய அம்மா அப்பாவோடு எவ்வளவு சந்தோஷமாக இருப்பார்கள் ... என்னுடைய அம்மா, அப்பா... புதுச்சட்டை ... அக்காவைப் பார்த்து எவ்வளவு காலம்; காணமுடியுமா?"

— மேரியின் மனதிலே இப்படியான ஏக்க நினைவுகள் மின்னி மறைந்து கொண்டிருந்தன; அழுகையும் கண்ணீரும் பெருக்கெடுத்தது.

அப்போது —

"மேரி ... மேரி ... எத்தனை தரம் கத்துகிறது, மாடுமாதிரி விடியத்தொடக்கம் அங்கேயே நிற்கிறாயே! போன போன இடத்தில் நின்று தொலைக்குதே மூதேவி!"

— அவளின் எசமானியம்மா அழைத்த குரல் மேரியை நிலைகலங்க வைத்தது; வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்; வாளியை வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு நடுங்கிய வண்ணம் எஜமானியம்மாவிடம் சென்றாள். பதுங்கிப் பதுங்கி நின்ற மேரியைப் பார்த்து எஜமானி அதட்டினாள்!

"என்னடி முழிக்கிறே— வேலையை ஒழுங்காய் நேரத்துக்குச் செய்யமாட்டாய்!"

மேரி அழுகையை அடக்கிக் கொண்டாள்

"போடி போ! போய்விடெல்லாவற்றையும் கூட்டு; இன்று ஐயாவோடு பலர் வருகிறார்கள், நாளை மறுநாள் கிறிஸ்மஸுக்கு! வேலைக்கு வேலை கனக்கவனி..."

— எஜமானி கத்தினாள்.

மேரி 'தும்புக் கட்டை'யை எடுத்து கூட்டத் தொடங்கினாள்.

— 2 —

மேரி—

பிறந்தபோதே தன் தாயை விழுங்கிவிட்டாள்; ஆம், பிறந்த அரைமணி நேரத்திலே அவள் தாய் இந்த உலகைவிட்டு மறைந்து விட்டாள்.

பாவம், மேரியையும் மேரியின் அக்காவையும், அப்பாவையும் தனித்துவிட்டு விட்டு எங்கோ சென்று விட்டாள் மேரியின் தாய்!

அன்றிலிருந்து மேரியையும் மேரியின் அக்காவையும் வளர்க்கும் பொறுப்பை அந்த ஏழை மனிதரே – மேரியின் அப்பாவே ஏற்றுக்கொண்டார்.

தோட்டத்திலே கூலி வேலை செய்யும் அவரால் அந்த இரண்டு சிறு குழந்தைகளையும் எப்படிக் காப்பாற்ற முடியும்?

மேரிக்கு ஏழே வயதானதும், தனக்குத் தெரிந்த பெரிய தொரு முதலாளி வீட்டில் வேலைசெய்வதற்காக விட்டார்.

எஜமானியம்மாளோ தன் பிள்ளைகளை ஒருவிதமாகவும் மேரியை வேறு விதமாகவும் நடத்தினாள்.

மேரிக்கு—

அடியும் உதையும்; ஏச்சும் பேச்சும்!

— 3 —

விடிந்தால் கிறிஸ்மஸ்!

மேரிக்குப் புதுச்சட்டை கிடையாது; அவள் மனம் நாளை நடக்கவிருக்கும் கிறிஸ்மஸை புதுச்சட்டைபோட்டுக் கொண்டாட முடியுமென்ற நம்பிக்கையை இழந்துவிட்டது.

தன் அப்பா வருவார், வருவார் என்று சென்ற இரண்டு நாளாக எதிர்பார்த்திருந்தாள்; அதைக்கூட இப்போது மறந்து விட்டாள்.

நாளை கிறிஸ்மஸில் தனக்கு 'ஒன்று'மே கிடையாது என்று எண்ணிக் கொண்டே சிந்தனைக் கடலில் மூழ்கினாள்.

அப்போது—

"மேரி" என்று அவளை குழைவோடு அழைக்கும் அன்பான குரல் அவளை அதிர்ச்சிக்க வைத்தது.

அவளை அன்பாக அழைக்கக் கூடிய குரல் வேறுயாருடையதாக இருக்க முடியும்?—

அவளுடைய அப்பாவாக இருக்கலாம்; அல்லது அவள் அக்காவாக இருக்கலாம்,

திரும்பிப் பார்த்தாள்! அங்கே—

அவள் அன்புக்குரிய அப்பா புதிய தோற்றத்துடன்— வெள்ளை வேட்டி, புதுச் சேட்டுடனும் குளிர்ச்சியுடனும் நின்றுகொண்டிருந்தார்.

அப்பாவைக் கண்டதுதான் தாமதம், மேரி மகிழ்ச்சியால் பூரித்துக்கொண்டாள் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து தந்தையைக் கட்டிஅணைத்துக் கொண்டாள்

"அப்பா!"—என்றாள் மகிழ்ச்சி பொங்க!

"மேரி!" — என்றார் தந்தை.

"மேரி, உன்னை இன்று வீட்டுக்குக் கூட்டிப் போகிறேன்— எமது வாழ்விலே நல்லகாலம் பிறந்துவிட்டது மகளே!"— என்று இன்பப் பூரிப்பில் மகளை அணைத்தபடியே பேசினார்.

"மேரி! 50,000 ரூபா கவிப் அதிர்ஷ்டப் பரிசு தந்த ஏழைக்குக் காணிக்கையாக தந்துள்ளாரே ஆண்டவன்! நீ இனி கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை; இன்றே நாம் வீட்டுக்குப் போவோம்!"—தந்தை மகளிடம் தன்னை மறந்து கூறினார்.

"அப்பா! நாளைக்குக் கிறிஸ்மஸ்; எனக்குப் புதுச்சட்டை வாங்கித் தருவீர்களா?"—மேரி கேட்டாள்.

"மேரி! புதுச் சட்டை மட்டுமல்ல; உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தருகிறேன்; வீட்டில் அக்கா உன் வரவுக்காகக் காத்திருக்கிறாள்; பல வருடமாக கொண்டாடாத கிறிஸ்மஸை இம்முறை 'டமாரமாகக்' கொண்டாடுவோம்."

## விதானையாரைப் பார்த்து....

யாழ்ப்பாணம்பஸ் ஸ்டாண்டிலிருந்து வவுனியாவிற்குப் புறப்படும் பஸ் கிளம்புவதற்கு ஆயத்தமாக இருந்தது. கண்டக்டர் "டிக்கெட்" போட்டுக்கொண்டு வந்தார். ஒரு பெண் பிரயாணிமுன் வந்ததும்,

"எவ்விடம் அம்மா போகிறீர்கள்?"

"ஊருக்குத்தான்"

"அடகஷ்டமே, அதுதான் எவ்விடமென்கிறேன்."

"வட்டுக்கோட்டைக்கு."

"என்ன, வட்டுக்கோட்டைக்கா! பஸ்ஸைப் பார்த்து ஏறக்கூடாதோ."

"பார்த்துத்தானே ஐயா ஏறினேன்."

"அப்படியென்றால் வட்டுக்கோட்டைக்கென்று "போர்ட்" போட்டிருக்கு?"

"போர்ட்டை பெல்லாம் யாரையா பார்த்தார்கள். பின் சீட்டிலிருக்கிற நம் ஊர் விதானையாரைப் பார்த்தல்லவா ஏறினேன்."

— காஸ்.

## ஏசு பிறந்தார்

— இ. நா. —

பாவ இருளைப் போக்கிடவும்
படியில் அருளை ஆக்கிடவும்
தேவ சுதனும் ஏசுபிரான்
திவ்விய கன்னி வயிற்றுதித்தார்.

மாரி காலக் குளிரிரவில்
மாடு மேய்க்கும் இடையர்களின்
சேரிக் குடிலில் செகமுய்ய
யேசு வந்து பிறந்தாரே.

வானத் தாரகை ஒளிகாட்ட
மன்னர் மூவர் வழிகொண்டு
ஞானக் குமரன் ஏசுவையே
நாடி வந்தே வழிபட்டார்.

விண்ணோர் தொழுது போற்றிடவே
மேலாம் உலைம விளக்கிடவே
மண்ணின் மனிதர் மகனாக
வந்தார் ஏசு வாழ்வளிக்க.

அன்பின் வழியில் அனைவரையும்
ஆக்கம் காட்டி வாழ்கிடவே
துன்பக் கொடுமைச் சுமையேற்று
தூய்மைப் பொறுமை துலக்கினரே!

மாடு கட்டும் குடிசையிலே
மழையின் குளிரில் நடுநிசியில்
பாடு படவே உலகோரின்
பாவந் தீர்க்க பிறந்தாரே!

உலகில் உண்மை நிலைத்திடவும்
ஒற்றுமை அன்பு ஓங்கிடவும்
சிலுவை சுமந்து சிறுமையுற்று
தெய்வப் பொறுமை விளக்கினரே!

மனிதர் வாழ்வு மாண்புறவே
மாசில் உண்மை வயங்கிடவே
புனிதர் யேசு பூமிசையால்
புகன்ற வழியைப் போற்றுவமே.

பொல்லா உகைப் புன்மையது
போகப் புதுமை ஒளியா
இல்லார் உள்ளார் எனுபேதம்
இல்லா தாக்க ஏசுவந்தார்.


### வரி விளம்பரம்

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உததரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்,

**புத்திரபாக்கியம்**

பெண்களில் பலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்றுக லை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேதவைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம் 1176

### பிளாஸா தேயிலை

பாவிப்பாளர்களுக்கு !

**ரூபா 15,000**

( 283 பரிசுகள் காத்திருக்கின்றன )

போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.

**பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,**
**தரத்திலும் குணத்திலும் உயர்வானது,**
**தேயிலை தரம் உருசிபார்க்கும்**
**நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.**
**இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.**

**ராஜா சினிமா**
(சுழிபுரம்)
சிவாஜி, எஸ். எஸ். ஆர்.
பண்டரிபாய் நடித்த
**பராசக்தி**

**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன் 485
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
**புனிதவதி**

**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Academy Award Winner Thiller!
SERENGETI
(Eastman Color)

### 4-வது மகத்தான வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **விஜயா** (மட்டக்களப்பு)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜிதா** (அட்டன்)

தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பக்தியை மூட்டி,
தெய்வத்தின்
நிலை அடைந்து
தமிழர் உள்ளத்தில்
வாழும் - பட்டினத்தார்



**பிரபல**
**பின்னணி பாடகர்**

**டி. எம்.**
**சௌந்தரராஜன்**

**எம். ஆர். ராதா**
**ஜெமினி சந்திரா**
**எஸ். ராமராவ்**
**எஸ். டி. சுப்புலக்ஷ்மி**
**எஸ். ஆர். ஜானகி**

நடித்த

# பட்டினத்தார்

சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

# அரசியல் கட்சிகளும் அவைகளின் ...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வடக்கு கிழக்கு மாகாணங்களை தவிர்ந்த மற்ற எல்லா மாகாணங்களிலும் ஐ. என். பி. போட்டியிடத் தீர்மானித்துள்ளது. கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளிலும், வடக்கு மாகாணத்தில் உடுப்பிட்டி, உடுவில் ஆகிய தொகுதிகளிலும் போட்டியிட தீர்மானித்துள்ளது.

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயக்காவால் 1951-ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1952-ல் நடைபெற்றபொதுத் தேர்தலில் இக்கட்சி சார்பில் 9 பேர் வெற்றிபெற்றனர். 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், இக்கட்சி, பிலிப் குணவர்த்தனாவின் லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற நாமத்துடன் 60 தொகுதிகளில் போட்டியிட்டு 51 தொகுதிகளில் வெற்றிபெற்றது. 1956-ம் ஆண்டு தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சியுடனும், கம்யூனிஸ்ட் கட்சியுடனும் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தமும் செய்துகொண்டது. திரு பண்டாரநாயக்கா பிரதமரானார். 1959-ம் ஆண்டு திரு. பிலிப் குணவர்த்தனாவும் வேறு சிலரும் இக்கட்சியிலிருந்து வெளியேறினார்கள் திரு. பண்டாரநாயக்கா காலமானபின் திரு. சி. பி. டி. சில்வா தலைமையில் இக்கட்சி 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் 108 தொகுதிகளில் போட்டியிட்டு 40 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1960 ஜூலை தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் 98 இடங்களில் போட்டியிட்டு 75 தொகுதிகளில் வெற்றிபெற்றது. இவர்களில் திரு. சி. பி. டி. சில்வா உட்பட 14 பேர் இப்பொழுது விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். எதிர்வரும் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த மற்ற மாகாணங்களில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துபோட்டியிட முடிவுசெய்துள்ளது.

## சமசமாஜக்கட்சி

1935-ம் ஆண்டு சமசமாஜக் கட்சி இயக்கம் ஆரம்பமானது. 1935-ம ஆண்டு சமசமாஜக் கட்சி உருவானது. 1939-ம் ஆண்டு கட்சியில் குழப்பம் ஏற்பட்டது 1940-ம் ஆண்டு கட்சி தடைசெய்யப்பட்டது. கட்சித்தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் சமசமாஜக்கட்சி 101 தொகுதிகளில் போட்டியிட்டு 10 பேர் வெற்றி பெற்றார்கள். 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து 21 தொகுதிகளில் போட்டியிட்டு 13 தொகுதிகளில் வெற்றிபெற்றது. எதிர்வரும் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

## கம்யூனிஸ்ட் கட்சி

1943-ம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பமானது, ஆனாலும் இக்கட்சித் தலைவர்கள் அதற்கு முன்பே கம்யூனிஸத்தை ஆதரித்துவந்தார்கள். 1947-ம ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 3 தொகுதிகளில் இக்கட்சி வெற்றி பெற்றது. 1952-ம் ஆண்டுத் தேர்தலில் 16 தொகுதிகளில் போட்டியிட்டு 3 பேர் வெற்றி பெற்றனர். 1956-ம் ஆண்டுத் தேர்தலிலும் 3 பேர் வெற்றி பெற்றனர். 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் 52 தொகுதிகளில் போட்டியிட்டு 3 பேர் வெற்றிபெற்றனர். 1960-ம் ஆண்டு ஜூலையில் 7 தொகுதிகளில் போட்டியிட்டு 4 தொகுதிகளில் வெற்றிபெற்றது எதிர்வரும் தேர்தலிலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

## ஜாதிக விமுக்தி பெரமுனே

திரு. கே. எம். பி. ராஜரத்னாவைத் தலைவராகக்கொண்ட ஜாதிக விமுக்தி பெரமுனே 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் இரு தொகுதிகளில் வெற்றிபெற்றது. ஜூலையிலும் இரு தொகுதிகளில் வெற்றி பெற்றது.

## மக்கள் ஐக்கிய முன்னணி

திரு. பிலிப் குணவர்த்தனாவைத் தலைவராகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி பொதுத் தேர்தலில் போட்டியிடும்.

## ஐக்கிய இடதுசாரி முன்னணி

திரு ரூபர்ட் குணவர்த்தன தலைமையில் ஐ. இ மு. எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும்

## சமசமாஜக்கட்சி (புரட்சிப் பகுதி)

திரு. எட்மண்ட் சமரக்கொடியைத் தலைவராகக் கொண்ட சமசமாஜக் கட்சிப் புரட்சிப் பிரிவினரும் தேர்தலில்போட்டியிடுகிறார்கள்.

## லங்கா பிரஜா தந்திரக் கட்சி

திரு. டபிள்யூ. தகநாயக்காவைத் தலைவராகக்கொண்ட லங்கா பிரஜா தந்திரக் கட்சியும் தேர்தலில் போட்டியிடும்.

## இலங்கை ஜனநாயக காங்கிரஸ்

திரு. தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கை ஜனநாயக காங்கிரஸும் தேர்தலில் மலைநாட்டுத் தொகுதிகளில் போட்டியிட ஆலோசனை செய்துவருகிறது.

## 4ம் பக்க தொடர்ச்சி

...ற்றுச் செய்தியேயும் தலைக்கவே ஒரு செயலுமில்லாமல் எல்லாம் இறைவன் செயலாகவே "தந்ததும் நீ கொண்டதும் நீ" என்று கூறுவது நயத்தற்குரியது. தந்தது, கொண்டது என்ற சொற்கள் கவனத்துக்குரியன. இன்னும் இப்படியாகப் பல இடங்கள் சிந்தைக்கும் செவிக்கும் நல்விருந்தும் பயனுமாயுள்ளன.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆதரவில் நடைபெற்ற திருவெம்பாவைச் சமயச் சொற்பொழிவில் திருமதி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்திய உரையின் சுருக்கம்.


### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள B, S, A. 3½ HP இலக்க மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. செல்வராசா, அபிநேசன் மோட்டர் கராச், இணுவில். 1842

நல்ல நிலைமையிலுள்ள மரம் அரியும் "விஸ்தர்" என்சின் 5 குதிரைப்பவர். விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு: க. சுப்பிரமணியம், மூளாய் ரோட், வட்டுக்கோட்டை மேற்கு. 1887


## வட்டுக்கோட்டையில் திருநெறி விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுசிவன் இந்துசமய அபிவிருத்திச்சங்க ஆதரவில் நடைபெறும் திருநெறி விழாவின் முதலாநாள் நிகழ்ச்சிகள் இன்று வட்டுக்கோட்டை சிவன்கோவில் மேலவீதியில் உள்ள "புலவர் நல்லதம்பி" அரங்கில் நடைபெறவிருக்கின்றன. திருமுறை ஊர்வலமும் பி, ப. 4 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

விழாவுக்கு சைவக்காவலர் திரு த. முத்துசாமிப்பிள்ளை தலைமை வகிப்பார். உபந்யாசங்கில் திருவாளர்கள் மு. வைரமுத்து, அ. அமிர்தலிங்கம், செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் கலந்து உரையாற்றுவார்கள். இசை, நடனம், நாடக கூத்து ஆகிய கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியேற்றி வைத்துப் பேசும் போது கூறியதாவது: இலங்கையில் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ந்திருந்தாலும் அது மக்களின் அன்றாட வாழ்வில் நெருங்கிய தொடர்பு கொள்ளவில்லை. இதற்குக் காரணம் இதய சுத்தியும், தலைவர்களும் தக்கபடி உழைக்காததே. கூட்டுறவு வழிகாட்டிகளுக்குக்கல்வி போதனையளிப்பதை அடுத்தவருடபிரச்சனையாக ஏற்றுக்கொள்வோம் இலங்கையில் இன்றுள்ள நெருக்கடிப் பிரச்சனைகளை தீர்க்க கூட்டுறவு இயக்கம் கட்டாயம் முன்வந்து உழைக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் வெளிப்பகுதியை அலங்கரிப்பதல் பயனில்லை. அத்திவாரத்தை பலப்படுத்த வேண்டும் தற்பொழுது அத்திவாரம் பலமற்றிருக்கிறது. ஐக்கியம் என்று சொல்கிறோமே தவிர கிராமத்தில் நடைபெறும் சிறு சச்சரவுகளை கூட ஐக்கிய சங்கத்தால் தீர்த்து வைக்க முடியவில்லை.

கூட்டுறவு ஆக்க சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு ஜெ. எப். சபாரத்தினம் பேசும்போது தவணைதப்பிய கடன்களை கட்டாதவர்களுக்கு மறியல் வழங்க சட்டம் இடம் கொடுக்கிறதென்றும், அடுத்த வருடம் ஊழல் குறைக்கப்படுமென்றும் கூட்டுறவு மேல் உத்தியோகத்தர்கள் திட்டமின்றி செயலாற்றுகிறார்களென்றும், இதற்கு விரைவில் முடிவு காணப்படுமென்றும் கூறினார்.

# திருவாசகத்தின் பெருமையை மேல்நாட்டினர் உணர்ந்துள்ளர்

## மணிவாசகர் விழாவில் பேச்சு

காரைநகர், சனி

"திருவாதிரை விழா சிதம்பரத்திலே மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஈழத்திலுள்ள அன்பர்கள் சிதம்பரம் சென்று திருவாதிரை விழாவைக் கண்டு களித்து வந்தனர். தற்பொழுது அங்கு சென்று வழிபடத் தடைகள் ஏற்பட்டபோதும் ஈழச்சிதம்பரத்தில் சிவகாமசுந்தரி சமேதராய் வீற்றிருக்கும் நடராஜப் பெருமானைக் கண்டு தரிசிக்கும் பேற்றினைப் பெற்றுள்ளோம்" என்று காரைநகர் மணிவாசகர் விழா மூன்றும் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் திரு. சே. பி ஹென் குறிப்பிட்டார்.

வித்துவான் க. கார்த்திகேசு பேசுகையில், நான்கு நாயன்மார்களிலும் மணிவாசகருக்கு திருவாதிரை விழா எடுக்கிறோம். தேவார திருவாசகங்கள் நமது உள்ளொளியைப் பெருக்குகின்றன என்று கூறினர்.

"அமுதனைடந்த அன்பராகிய திருவாதவூரடிகள் பெருங்குணி எனப்படுவதை" உணர்ந்தறியா துணவேல் மணிவாசகத்தையும் திருக்கோவையாரையும் நோக்குக, மணிவாசகரது அறிவால் சிவனெயாவதின்னம்' என்று கவாமிநாத தேசிகர் உரையால் நாம் உணரலாம். தித்திக்கும் திருவாசகத்தில் தமிழ்நாட்டினர் மட்டுமன்றி வடநாட்டினரும், மேல் நாட்டினரும் ஈடுபட்டு கொண்டு அதில் ஊறித்திளைத்தனர்" என்று செல்வி க. பூரணம் திருவாசகத்தேன் என்னும் பொருள் பற்றிப் பேசும் போது குறிப்பிட்டார்.

வித்துவான் திரு. க வேந்தனார் "மணிவாசகர் கண்ட அன்பு நெறி" பற்றி சொற்பொழிவாற்றும்போது கூறியதாவது—

திருவாசகத்தின் மொழிபெயர்ப்பினைப் படித்த மேல்நாட்டினர் பலர் திருவாசகம் படிப்பதற்காக தமிழ் கற்கின்றனர். மேலைத்தேசங்கள் இன்று விஞ்ஞானத்தில் முன்னேறி புதிய புதிய நுட்பங்களைக் கண்டு கீழைநாட்டினருக்கும் பயன்படும்படி செய்கின்றனர். தமிழகமோ ஞானவுருவில் உள்ளளவில் பெருக்கும் திருவாசகத்தையும் சிறந்த திருக்குறளையும் உலகிற்களித்து எல்லோரும் பேரின்பம் அடையும்படி செய்துள்ளது."

திருமதி கமலா விவேகானந்தனின் திருமுறை ஓதலுடன் 3-ம் நாள் விழா நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

# திறமைசாலிகளையே தேர்ந்தனுப்ப வேண்டும்

## தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் திரு சிவசிதம்பரம் பேச்சு

உடுப்பிட்டி, வெள்ளி

"தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு பாராளுமன்றத்திற்கு உள்ளிலும் வெளியிலும் என்னால் இயன்றதைச் செய்வேன் என்று கடந்த தேர்தலின் போது நான் கொடுத்த உறுதிமொழியை இன்றுவரை காப்பாற்றிவந்ததுடன் தமிழ்ப்பகுதிகளில் இருந்த பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்களிலும் பார்க்கக் கூடுதலாக நான் இயங்கியிருக்கிறேன் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

இந்நாட்டில் புத்தசமயமே அரசாங்க சமயமாக இருக்க வேண்டுமென்றும் ஈழத்திருநாட்டில் பொன் கொழிக்கச் செய்த இந்தியத் தொழிலாளரை வெளியேற்றுவதற்காக தான் மீண்டும் பதவியில் அமர வேண்டும் என்றும் ஸ்ரீமாவோ தெளிவாகக் கூறியுள்ளார். இந்த இரண்டு கொள்கைகளையும் முக்கியமாக வைத்துப் பிரசாரஞ்செய்யும் கூட்டாட்சிக்கும் அதற்கு உதவியாக உள்ள சமசமாஜ—கம்யூனிஸ் கட்சிகளுக்கும் தமிழ்ப் பொது மக்கள் ஆதரவளிக்கமுடியாது"

இவ்வாறு கரவெட்டி அம்பம் மருத்துவ மனைக்கு முன்பாக நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழர்களின் ஒற்றுமையைக் காப்பாற்றவேண்டுமென்பதற்காகவே சமஷ்டிக் கட்சியினர் பாராளுமன்றத்திற்கு வெளியே நடாத்திய இயக்கத்தில் நான் கலந்து கொண்டேன். வாழ்க்கையில் எவரிடமும் பெற்றோரிடம்கூட அடிவாங்கியறியாத நான் கடந்த சத்தியாக்கிரகத்தின் போது இராணுவத்தினரிடம் அடிவாங்கினேன அச்சமயம் நான் வெளியேறியிருந்தால் தமிழர்களுக்கு இன்னல் ஏற்பட்ட நேரத்தில் எந்த ஒரு தமிழ்ப்பிரதிநிதியும் அருகில் இருக்கவில்லை என்ற அவச்சொல் ஏற்பட்டிருக்கும்.

எண்ணிக்கையில் குறைந்த நாம் உரிமைகளுக்காக வாதிக்கக்கூடிய வாதத்திறமை மிக்க உறுப்பினர்களையே பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும். எமது முக்கிய கொள்கைகளில் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். பரம்பரை பரம்பரையாக தமிழர் வசிக்கும் இடங்களில் சிங்களக் குடியேற்றம் நடைபெறக்கூடாது பரம்பரை பரம்பரையாகவுள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை யளிக்கப்படல் வேண்டும்.

கூட்டத்திற்கு தலைமைவகித்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக்கிளைத் தலைவர் திரு எஸ. சரவணமுத்து பேசுகையில் "எங்கள் ஸ்தாபனமாகிய காங்கிரசை திரு. சிவசிதம்பரம் இன்னும் பலப்படுத்தி காங்கிரஸை வலுவுடன் ஒத்துழைத்து 1947-ல் அதற்கிருந்தசெல்வாக்கை மீண்டும் பெறச்செய்வார் என்று நம்புகிறோம்" என்று கூறினர்.

கிளிநொச்சி முன்னாள் எம்.பி. திரு. சிவசுந்தரம், திரு. க. ஞானசுப்பிரமணியம், வழக்கறிஞர் திரு. ஆ. சிவபாதசுந்தரம் திரு. எஸ. சிறீதரன், இளைப்பாறிய ஆசிரியர் வி. நடராசா, திரு. ஏ, கே. குணசிங்கராசா ஆகியோர் உட்படப் பலர் பேசினர். உடுப்பிட்டித் தொகுதி மக்களின் சார்பில் மு. சிவசிதம்பரத்திற்கு தேர்தல் கட்டுப்பணம் அன்பளிக்கப்பட்டு காசோலையாக வழங்கப்பட்டது

## சைப்பிரஸ் சமாதானப் படை

நியூயோர்க், டிச, 19

சைப்பிரஸில் ஐக்கியநாடுகள் சபை சமாதானப் படையை அடுத்தவருடம் மார்ச்மாதம் வரை நீடித்து வைத்திருப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சமசமாஜக்கட்சி அபேட்சகர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாண வட்டக்கிளைக்கூட்டத்தில், உடுப்பிட்டி, நல்லூர், கிளிநொச்சி, உடுவில் ஆகியநான்கு தொகுதிகளில் லங்கா சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்கள் குறித்து இறுதி முடிவு செய்யப்பட்டது.

உடுப்பிட்டித் தொகுதியில் திரு ஆர். ஆர். தர்மரத்தினம், நல்லூர்த்தொகுதியில் திரு. ஏ. விசுவநாதன், கிளிநொச்சி திரு. ஆனந்தசங்கரி, உடுவில திரு. பி. நாகலிங்கம் ஆகியோர் லங்கா சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிடுவார்கள்.

இது தவிர கோப்பாய், பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவது குறித்தும் கட்சி ஆராய்ந்து வருகிறது.

## அபராதம் ரூ. 1000

கொழும்பு, சனி

ஒரு றாத்தல் பருப்பை கட்டுப் பாட்டு விலையிலும் பார்க்க 5 சதம் கூடுதலாக விற்பனை செய்த குற்றத்துக்காக கல்கிசையைச் சேர்ந்த பி. ஜயதிலகா என்ற வர்த்தகருக்கு கொழும்பு தெற்கு மஜிஸ்டிரேட் திரு. ஜே. ஜி. எஸ். சுவரிஸ் 1,000 ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு ஜீ. ஜீ பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வந்தபின்னர் தமிழ்க்காங்கிரஸ்கட்சியின் நியமனக்குழு கூடி, கட்சி அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி தீர்க்கமாக முடிவுசெய்யும் என்றும் தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி திரு. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார். அபேட்சகர்கள் பற்றிய உத்தியோக பூர்வமான அறிவிப்பு திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் வந்தபின்னர் வெளியிடப்படும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 82-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.